மூலிகை மணி

[மலர் 8] வேலூர் மருத்துவர் :- ஆ. இரா. கண்ணப்பர் [இதழ் 8

THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY
RECEIVED
3 JUL 1972

பொன்னாவாரை

149-வது மூலிகை!

விலை
50-காசு

அமைச்சருடன் அரைமணி நேரம்!



ஆசிரியருடன் ... ...



துணையாசிரியருடன் ... ...

கடந்த 7—6—72 அன்று நலத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்களைச் சந்தித்து, "நமது போராட்டம்" பற்றி அரைமணி நேரம் கலந்துரையாடினோம். அந்த அரைமணி நேர உரையாடலில், அவர், கூறிய கருத்துக்கள் பல நம்மால் வரவேற்கக் கூடியதாகும். அதற்காக நாம் அவருக்கு தனிப்பட்ட முறையில் நன்றியையும், "**சித்த மருத்துவம் சீர்பெற வேண்டுமே**" என்பதில் அவர் கொண்டுள்ள ஆழ்ந்த அனுதாபத்திற்கும் நமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். போராட்டம் பற்றிய நமது வேண்டுகோளினைப் பற்றி அவரது கருத்துக்கள் தலையங்கமாக வடித்துக் கொடுக்கப் பட்டுள்ளது. நமக்காக அரை மணி நேரம் அன்புடன் பேட்டியளித்த அமைச்சர் அன்பழகனைப் பாராட்டி மகிழ்கின்றோம்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றினை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.— (தாயுமானவர்)

மலர் 8] பரிதாபி ஞூ - ஆனி மீ ஜூன்—72 [இதழ் 8

பெயர் மாற்றம் பற்றிய தலையங்கத் தொடர்-4.

Operation Success - But Patient DIED!

பெயர் மாற்றம் பற்றிய தலையங்கத் தொடர் - நீண்டு கொண்டிருப்பதற்குக் காரணம், கடந்த 7—6—1972 அன்று நலத்துறை அமைச்சர் அன்பழகன் அவர்களைச் சந்தித்து உரையாடியதே ஆகும். அவருடன் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைப் பற்றி மனம் திறந்து பேசிய பின்னர், பெயர் மாற்றம் பற்றிய வேண்டுகோளினைத் தெரிவித்த போது, அவர் அதனை செயல்படுத்த இயலாமை பற்றி 'சில மழுப்பல்களை'க் கூறினார். அமைச்சருடைய சந்திப்பின் முதற் காரணமே 'பெயர் மாற்றம்' பற்றியது தான். ஆனால் அமைச்சருடன் பேசியதில், சில வளர்ச்சித் திட்டங்கள் நம்மைக் கவர்ந்தன. ஆனால், முதற் காரணமான "பெயர் மாற்றம்" கோரிக்கை செத்து விட்டது. எனவே தான் ஆங்கில மருத்துவ உலகில் அடிக்கடி அடிபடும் ஆங்கிலத் தொடரான '**Operation Success but Patient Died**' என்ற எண்ணம் அமைச்சருடன் பேசிய பின்னர் ஏற்பட்டது. "சந்திப்பால் பயன் ஏற்பட்டது. ஆனால் நமது கோரிக்கை பயன் பெறவில்லை" என்பதே பொருள்.

இனி சென்ற இதழ் தலையங்கத்தில் குறிப்பிட்டவாறு 9—7—72 அன்று போராட்டம் நடத்த திட்டமிட்டவாறு சில ஏற்பாடுகளைச் செய்து வந்தோம். இடையில் 31—5—72 அன்று, சிக்கல் சிங்கார வேலர் ஆலய நிர்வாக அலுவலர் திரு. டி. பி. வெங்கடாசலம், பி. ஏ., அவர்கள், மேற்படி ஆலயத்தில் 'இலவச சித்த மருத்துவ நிலையம்' ஒன்று திறக்க இருப்பதாகவும், திறப்பு விழாவினை யொட்டி 'சித்த மருததுவக் கருத்தரங்கு' ஒன்று நடத்த ஏற்பாடாகி இருப்பதாகவும், அதில் என்னை கலந்துக் கொண்டு சிறப்புரை ஆற்றுமாறும் கேட்டுக் கொண்டனர்.

அவரின் விருப்பத்திற்கிணங்க 31—5—72 அன்று சிக்கல் சிங்காரவேலர் சித்த மருத்துவ மனைத் திறப்பு விழாவில் கலந்துக் கொள்ள சென்றபோது, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ., அமைச்சர் அன்பழகன், அமைச்சர் மன்னை நாராயணசாமி, டாக்டர் பு. மு. வேணுகோபால் ஆகியோரைச் சந்திக்க நேர்ந்தது. கருத்தரங்கில், 'மூலிகை மணி' யின் தலையங்கமே பிரதிபலித்தது. அமைச்சர் அன்பழகன், "சித்த மருத்துவப் பெயர் மாற்றம் போன்றவற்ருல் மட்டுமே—அந்த மருத்துவம் வளர்ந்து விடும்! என்று சொல்வதற்கு இல்லை" என்று நமது கோரிக்கையை மறுத்துரைத்தார்.

அடுத்துப் பேசிய முத்தமிழ்க் காவலர், கி. ஆ பெ. அவர்கள் அமைச்சரின் மறுப்புரையை எதிர்த்து, 'சித்த மருத்துவம்' என்று பெயர் வைக்க கோரி 'மூலிகை மணி' போராடுவதில் தவறில்லை. அது நியாயமானதே என்றும், தமிழைப் போற்றும் இந்த தி. மு க. அரசு கூட 'சித்த மருத்துவம்' என்று பெயர் வைப்பதில் வெட்கப் படுவது கண்டு, தான் வேதனை அடைவதாகக் கூறினுர். ஆக, அன்றைய கருத்தரங்கு முழுக்க முழுக்க, மூலிகை மணியின் வைகாசி இதழ் தலையங்கக் கருத்தரங்காக மாறியது.

இடைவேளையின் போது திரு கி. ஆ. பெ. அவர்களை, இப் பேராட்டத்திற்குத் தலைமை ஏற்று வழிநடத்தக் கோரினேன். அவர் "அமைச்சர் அன்பழகன் அவர்களிடம் நேரில் சென்று கலந்து உரையாடி ஆளுநருக்கு 100 நாட்கள் தவணை கொடுத்தது போல், அமைச்சருக்கும் சில நாட்கள் தவணை கொடுங்கள். அப்படி செய்ய வில்லையானுல் நானும உங்களுடன் போராட்டத்தில் கலந்துக் கொள்கிறேன்" என்று கூறினுர்.

பொதுவாக, எந்த நலத்துறை அமைச்சரையும் தனிப்பட்ட முறையில் நான் சந்தித்தது கிடையாது. காரணம், "நாம் ஏதோ அவர்களிடத்தில் 'ஆதாயம்' தேடத்தான் செல்கின்ருேம்" என்ற

மனப்பான்மையில் பெரும்பான்மையான அமைச்சர்கள் நினைக்கின்றார்களே தவிர, நாம் கூறும் பிரச்னைகளைச் செவி சாய்த்துக் கேட்பது கூட இல்லை. இது நான் சித்த மருத்துவ ஆலோசனைக் குழு உறுப்பினராக அமைச்சர் நெடுஞ்செழியன் காலத்தில் இருந்தபோது எனக்கு ஏற்பட்ட அனுபவம். இந்த அனுபவத்தால் தான், எந்த பொதுப் பிரச்னையையும் வாசகர்கள் மத்தியில் 'மூலிகை மணி' வாயிலாக தெரிவிப்பது வழக்கம்.

திரு. கி. ஆ பெ. அவர்களின் ஆலோசனையைப் புறக்கணிக்கக் கூடாது என்ற எண்ணத்தில், திரு. அன்பழகனை சந்திக்க முடிவு செய்து 6—6—72 அன்று அமைச்சரின் அந்தரங்க உதவியாளரை அணுகினேன். பொதுவாக அமைச்சரின் P. A. என்றாலே, கெடுபிடி அதிகமாக இருப்பார் என்று எண்ணிச் சென்ற எனக்கு, அவர் அன்புடன் வரவேற்று, ஆதரவாகக் கூறிய வார்த்தைகள் உள்ளபடியே பாராட்டத் தக்கதாகும். ஏறக்குறைய அரைமணி நேரம் காத்திருந்த பின்னர், அமைச்சர் அவர்கள் பேட்டி அளித்தார்கள்.

அமைச்சரின் பேச்சு வார்த்தையில் கண்ட குறைகளும் நிறைவுகளும்

அவருடன் பேசியதில் பல நிறைவுகளும், சில குறைகளும் தெரிந்தன. பொதுவாக, அவர் நாம் சொல்வதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, வெகு சாமர்த்தியமாகப் பதில் சொல்கின்றார். பச்சையப்பர் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர் என்பதற்கான முத்திரை தெளிவாகத் தெரிந்தது.

நிறைவுகள் :

1) பொதுவாக, சித்த மருத்துவத்தினை மேன்மை நிலைக்கு கொண்டு வருவதில் இந்த அரசு செய்வதைக் காட்டிலும் வேறு எந்த அரசும் செய்யப் போவதில்லை.

2) எங்களின் முதல் திட்டம், ஏறக்குறைய 200 B. I. M. பட்டதாரி மருத்துவர்களை உடனடியாகத் தயார் செய்து, அவர்களைக் கொண்டு தமிழ்நாடெங்கும் 200 சித்த மருத்துவ மனைகளைத் திறந்து மக்களிடையே பரப்புவதாகும்.

3) ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட வருமானமுள்ள திருக்கோயில்களில், சித்த மருத்துவ மனைகளை ஆரம்பிப்பது

அடுத்த திட்டமாகும். இந்த வகையில் திருச்செந்தூர், பழனி, சிக்கல் போன்ற ஆலயங்களில் இந்த திட்டம் நன்முறையில் நிறைவேறி வருகிறது.

4) ஒவ்வொரு மாவட்டத் தலைநகர் மருத்துவ மனைகளில் 'சித்த மருத்துவ மனை' பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது. இவ் வகையில் திருச்சி, சென்னை, வேலூர் போன்ற இடங்களில் இத் திட்டம் வெற்றிகரமாகவும், திருப்தியாகவும் செயல்பட்டு வருகிறது.

5) பாளையங்கோட்டையில் உள்ள B. I. M. கல்லூரி படிப்பில் மேற்படிப்பு ஒன்று M. D. (Siddha) என்ற படிப்பு விரைவில் துவக்கப்பட இருக்கின்றது. இதன் மூலம் வருங்காலத்தில் சித்த மருத்துவ பட்டப் படிப்பு நன்முறையில் விரிவாக்கப்படும்.

6) தனிப்பட்டவர்கள் யாராவது ரூ. 50,000 முதலீடு செய்தால். அரசு ரூ. 5,0000 கொடுத்து அவர்கள் ஊரில் அவர் பெயரிலேயே ஒரு சித்த மருத்துவ மனையை நடத்த அரசு இசைவுதரக் காத்துக்கொண்டிருக்கின்றது.

7) "சித்த மருத்துவ வளர்ச்சி நிதிக்காக" இவ்வாண்டு 'முதல்வர் கருணாநிதி பிறந்தநாள் விழா' கொண்டாட திட்டமிட்டிருந்தோம். ஆனால், "கண்ணிழந்தோர்க்கு நிதி உதவி" சேர்க்க முதலிலேயே திட்டமிட்டு விட்டதால், அடுத்த ஆண்டு முதல்வரின் பிறந்தநாள் விழாவிற்கு, 'சித்த மருத்துவ வளர்ச்சி நிதி' சேர்க்க திட்டமிட்டுள்ளோம். அத்துடன் லாட்டரி சீட்டு வருமானத்தையும் இதற்கு செலவிட முயற்சி செய்து வருகின்றோம். உங்களைப் போன்றவர்கள் 'மூலிகைப் பண்ணை' நடத்த முன் வந்தால், இதற்கான உதவிகளை வசதிகளை செய்யத் தயாராக இருக்கிறோம்.

இன்னும் வாய்க்கின்ற வழிகளிலெல்லாம் இந்த மருத்துவத்தினை வளர்க்க உறுதியாக எண்ணம் கொண்டுள்ளோம் என்று அமைச்சர் தெளிவாகக் கூறினர். இது ஒரு வகையில் அமைச்சரை சந்தித்ததில் நமக்கு ஏற்பட்ட ஒரு வகையான மன நிறைவு. இதனைத்தான் 'Operation Success' என்று குறிப்பிட்டேன்.

இனி, போராட்டம் பற்றி கேட்டபோது அவர் கூறிய பதில்கள் அனைத்தும் எனக்கு குறையுள்ளதாகவும், மழுப்பலாகவும், பொருத்த மற்றதாகவும் தெரிந்தது.

குறைகள் :

1) 'சித்த மருத்துவம்' என்று பெயர் மாற்றம் செய்வ தால் அந்த மருத்துவம் வளர்ந்துவிடப் போவதில்லை. முதலில், இந்த மருத்துவத்தினை மக்களிடையே நன்கு பரப்ப வேண்டும். வயிற்றில் குழந்தை இருக்கும்போதே அதற்கு யாரும் பெயர் இடமாட்டார்கள். குழந்தை முதலில் பிறக்கட்டும் — பிறகு பெயர் வைப்போம். முதலில் சித்த மருத்துவம் வளரட்டும் — பிறகு பெயரை மாற்றுவோம் என்று கூறினர்.

2) கொள்கையளவில் நான் உங்களுடைய "பெயர் மாற்றக் கருத்தினை" வரவேற்கின்றேன். நான் கடைசியில் அந்த பெயர் மாற்றம் செய்ய விரும்புகிறேன். நீங்கள் முதலில் அதனை செய்யச் சொல்கின்றீர்கள். இது தான் நமக்குள் வேறுபாடே தவிர, வேறொன்றுமில்லை! என்று கூறிய அமைச்சர் அவர்கள்,

"ஏற்கனவே பெயர் மாற்றம் பற்றி, அரசு திரு. சாதிக்பாட்சா அவர்கள் காலத்தில் ஒரு ஆணை பிறப்பித்ததாகவும், பின்னர் அது மாற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறதே, அதைப் பற்றி என்ன கூறு கின்றீர்கள்?" என்று கேட்டபொழுது,

"அதெல்லாம் அரசியல் குறுக்கீடுகளால் நடைபெற்றிருக்கும். அதைப் பற்றி நான் ஏதும் சொல்வதற்கில்லை" என்று நாசூக்காக மழுப்பிவிட்டார்.

எப்போது தான் 'பெயர் மாற்றம்' செய்வீர்கள் என்று இறுதி யாகக் கேட்டபொழுது,

"எனது முதல் நோக்கம் 200 B. I. M. மருத்துவர்களை தயார் செய்து 200 சித்த மருத்துவ மனைகளை உடனடியாகத் திறப்பதுதான். அதனைச் செய்து முடித்த பின்னர் தான் 'பெயர் மாற்றம்' பற்றிச் சிந்திக்க முடியும். இப்போது நான் செய்ய முயற்சித்தால், அரசியல் சட்ட குறுக்கீடுகளால், கவர்னர் அதனை அங்கீகரிக்க மாட்டார்" என்று பதில் கூறினர்.

'அதற்கு எவ்வளவு காலம் ஆகும்?' என்றுவது நிர்ணயமாகக் கூற முடியுமா என்று கேட்டபொழுது, 'நாளைக்கு நான் அமைச்சராக இருப்பதே எனக்கு நிர்ணயமில்லை!' என்று வேதாந்த ரீதியாகப் பதிலுறுத்தார்.

'பெயர் மாற்றம் பற்றிய' பிரச்னையை என்னிடத்தில் நீங்கள் விட்டு விட்டு, நான் முன்னர்கூறிய திட்டங்கள் நடைபெற உங்களின் ஆதரவைத் தாருங்கள். உங்களைப் போன்ற சித்த மருத்துவர்கள் ஒற்றுமையுடன் மக்களை அணுகி, சித்த மருத்துவத்தை வளர்க்க முயற்சி செய்யுங்கள். "இந்த அரசு, தமிழுக்காகவும், சித்த மருத்து வத்துக்காகவும் தான் ஏற்பட்டது என்பதை திடமாக நம்புங்கள்" என்று சாதுர்யமாகப் பதிலுறுத்த அமைச்சர் அவர்கள், போராட்டத் தினைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டார். போராட்டம் பற்றிய அமைச்சர் நிலை, 'Patient Died' என்பது போலாயிற்று.

இந்நிலையில்,

அமைச்சரின் நிறைவுகளை மனதில் கொண்டு பார்த்தபோது, அவரின் வேண்டுகோளை புறக்கணிக்க இயலவில்லை. அமைச்சரின் குறைகளைச் சிந்தித்த போது, *போராட்டத்தினைக் கைவிடவும் மனம் துணியவில்லை!*

சிக்கல் சிங்காரவேலர் சன்னதியில், திரு. கி. ஆ. பெ. அவர்கள் கூறியது போல், அமைச்சர் இதனைப் பற்றி மறுசிந்தனை செய்ய அவகாசம் தரும் முறையில், **ஆகஸ்டு 10-ம் நாள் வரை** தவணை தருவது என்று முடிவுக்கு வந்தோம். அதற்குள் அமைச்சர் நமக்கு ஆதரவாக,

'நடை முறையில் பெயர் மாற்றம்'

செய்ய பதில் தருவாரேயானால், 'பெயர் மாற்றத்தினை' அவர் தலைமை யிலேயே, ஆகஸ்டு 15-ம் நாள் மூலிகைமணியின் சொந்த செலவில் அதனை ஒரு விழாவாகவே கொண்டாடலாம். அப்படி இல்லையெனில் ஆகஸ்டு 15-ம் நாள் பாரத விடுதலையின் வெள்ளி விழாவோடு, நமது சித்த மருத்துவ பெயர் மாற்றப் போராட்டத்தினையும் நடத்தி விடலாம்.

எனவே,

அமைச்சர் அவர்களே! பெயர் மாற்றம் பற்றிய தங்கள் கருத்தினை மறுசிந்தனை செய்ய கீழ்க்கண்ட காரணங்களை எண்ணிப் பாருங்கள்.

அண்மையில். 'Skin - Disease' க்கு முழுதும் குணம் தர வல்ல எனது மருந்து ஒன்றினை மேற்கு ஜெர்மனியில் ஆராய்ச்சி செய்ய ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள ஒரு அன்பர் என்னை அணுகினர். நான் அவருக்கு கூறிய ஒரே பதில்: என்னுடைய மருந்தை 'SIDDHA MEDICINE' என்ற பெயரில் தான் தயாரித்துத் தருவேன்' சம்மதமா? என்று கேட்டபோது,

"சார், வெளிநாட்டில் ஆயூர்வேதம் அல்லது Indian Medicine என்றால் தான் தெரிந்து கொள்வார்கள். 'Siddha Medicine' என்றால் தெரியாது. உங்களுக்கு பணம் தானே வேண்டும், பெயரில் என்ன இருக்கிறது" என்று சொன்னார்.

எனக்கு கோபம் பற்றிக்கொண்டு வந்தது. அவருக்கு நான் சொன்ன பதில்: "பணத்தைக் குறிக்கோளாகக் கொண்டு நான் எந்த மருந்தையும் தயார் செய்ய விருப்பமில்லை. சித்த மருத்துவ முறையிலே தயாரிக்கப்பட்ட எனது மருந்தின் குணம், வேறொரு மருத்துவத்தின் பெயரைக் கொண்டுதான் பிழைக்க வேண்டிய நிலையில் இல்லை! அந்த அவச் செயலை நான் செய்யத் தயாராயில்லை.

"சித்த மருத்துவ முறையில் தான் தயாரிக்கப்பட்டது"

என்ற பெயரில் நீங்கள் ஒப்புக்கொண்டால், எனக்கு மேற்கு ஜெர்மனி மட்டுமில்லை, எந்த நாட்டுக்கும் அனுப்பத் தடையில்லை" என்று கூறினேன். அதற்கு அவர் சிந்தித்துப் பதில் சொல்வதாகப் போய் விட்டார்.

இந்த சம்பவம் உணர்த்தும் ஒரு உண்மை- இத்தனை காலமாக மத்திய. மாநில அரசுகள், 'சித்த மருத்துவம்' என்ற பெயரில் அந்த மருத்துவத்தினைக் குறிப்பிடாத ஒரு பெருந் தவறே யாகும். இந்தத் தவற்றை தமிழைப் போற்றும் தி மு க. அரசு செய்வதில், அதற்கு என்ன நன்மையோ தெரியவில்லை.

"குழந்தை பிறக்கட்டும். பின்னர் பெயர் வைக்கலாம்" என்று கூறும் அமைச்சர் அவர்களே!

நீங்கள் பிறப்பதற்கு முன்னரே, உங்கள் தந்தையார் 'தனக்கு பிறக்கப் போகும் குழந்தைக்கு "இராமையா" என்று வைப்பேன் என்று (அமைச்சரின் இளமைப் பெயர் இராமையா) அவர் எப்போதாவது பேசியதுண்டா என்று கேட்டுப் பாருங்கள். ஏனெனில், குழந்தை வயிற்றில் இருக்கும் போதே, பிறக்கப் போவது ஆணாக இருந்தால், என் அப்பா பெயரும், பெண்ணாக இருந்தால் உன் அம்மா பெயரும் வைப்போம்" என்று கணவன் — மனைவி பேசிக் கொள்ளவது தமிழ் நாட்டு வழக்கம்.

எனவே, எதை எதையோ கூறி மழுப்புவதைக் காட்டிலும், 'இந்த பெயர் மாற்றம்' பிரச்னையை சட்டம், அரசியல் கண்ணோட்டம் கொண்டு நோக்குவதைக் காட்டிலும்,

"உண்மையான காரண காரியத்தினை உணர்ந்து அனுதாபத்துடன்" இந்த பிரச்னையை அணுகுங்கள்.

'நாளை என்பது நலிந்தவர்கட்குத் தான் இல்லை' என்பது பழமொழி.

'நாளை என்பது அமைச்சருக்கும் நிர்ணயமில்லை' என்பது தங்களின் புதுமொழியாக இருக்கின்றது. எனவே, உங்களின் கருத்துப்படியே பார்க்கப் போனால் கூட,

இந்த அரசிலும் கூட தங்களை விட்டால் வேறெவரும் செய்ய முடியாத அளவுக்கு, இந்த பிரச்னையில் தங்களுக்கு முழு ஈடுபாடு உள்ளது.

சித்த மருத்துவத்திற்கு இது நெருக்கடியான நேரம். இந்த நேரத்தில், இந்த ஆட்சியில், தங்களின் பதவிக் காலத்தில் இதனை செய்து முடிக்காவிட்டால் என்றைக்குமே செய்ய முடியாது.

நாளை என்பது உங்களுக்கே நிச்சயமில்லாத நிலையில்,

இன்றைக்கே பெயர் மாற்றத்தினை செய்து விடுங்கள்!

ஆகஸ்டு 10-ம் தேதி வரை தாங்கள் அமைச்சராக நிச்சயமாக இருப்பீர்கள். அதில் ஐயமே வேண்டாம்! உடனடியாக 'பெயர் மாற்றம் செய்ய அதற்குண்டான 'பைல்களை' அன்பு கூர்ந்து ஒரு முறை புரட்டிப் பாருங்கள். ஏற்கனவே 'பெயர் மாற்ற' உத்தரவு அந்த பைலில் இருக்கும். அதனை நிறைவேற்றுமல் தடுத்த 'அந்த பாவிகளை' கண்டுபிடித்து தண்டியுங்கள். மறுபடியும் உங்கள் திருக்கரத்தால் அந்த ஆணையை நிறைவேற்றுங்கள்.

துணிந்துச் செயலாற்றுங்கள்! துர்புத்தி படைத்தவர் தடை கூறினல் எங்களிடம் சொல்லுங்கள். ஆயிரமாயிரம் வாசகர்கள் அந்த தடைகளை தூள் செய்யத் தயாராயிருக்கிறோம்.

ஆகஸ்டு 10-க்குள் உங்களின் பதிலை எதிர்பார்க்கிறோம். ஆகஸ்டு 15 பாரத விடுதலையின் வெள்ளி விழா!

அன்று நிர்ணயிக்கப் படுவது,

சித்த மருத்துவப் பெயர் மாற்ற விழாவா?

சித்த மருத்துவப் போராட்டமா?

என்பது உங்களின் முடிவைப் பொறுத்ததாகும்.

— ஆசிரியர், 'மூலிகை மணி'

ஆசிரியருக்கு கடிதம்!

9—6—72.

C. சங்கர், வெள்ளலூர். P. O.

தமிழ் வைத்திய வேந்தர் அவர்களுக்கு, தங்கள் அன்புள்ள சங்கர் வரைந்த மடல். ஐயா, வைகாசி இதழ் கிடைக்கப் பெற்றேன். இம் பாதமாவது ஆளுநர் அவர்களிடமிருந்து சித்த மருத்துவத்திற்கு ஆதரவான பதில் கிடைக்கும் என்று ஆவலுடன் பிரித்து பார்த்தேன். ஏமாற்றமும், ஆத்திரமும் தான் அடைந்தேன். எனக்கு வருகின்ற ஆத்திரத்திற்கு, நானும் போராட்டத்தில் கலந்து கொண்டு, இந்திய மருத்துவ மனை என்ற பெயர்ப் பலகையை பிடுங்கி ஆளுநரின் மண்டையில் போட்டு உடைக்க வேண்டும் என்று தோன்றுகிறது. தங்களின் போராட்டத்தில் பல்லாயிரக் கணக்கோர் கலந்துக்கொண்டு போராட்டத்தினை நல்ல முறையில் நடத்தி 'வெற்றி' என்ற பட்டம் கிடைத்து தமிழ் மக்கள் மட்டுமல்லாது, உலக மக்கள் அனைவரும் சித்த மருத்துவப் பயனை அடைந்து நல்வாழ்க்கை நடத்த எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டிக்கொள்ளுகிறேன்.

* * *

இப்படிக்கு, C. சங்கர்.

வாசகர்களே!

கடந்த மூன்று மாதங்களாக தமிழக ஆளுநர் அவர்கட்கு, 'பெயர் மாற்றம்' பற்றிய கோரிக்கையைப் பற்றி வலியுறுத்தினோம். இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்பதை வருத்தத்துடனும், வேதனையுடனும் தெரிவிக்கின்றோம். சென்ற மாதமே ஆளுநர் பதிலை எதிர்பார்த்து ஏமாந்த பல வாசகர்கள், ஆளுநருக்கு கண்டன கடிதங்களை எழுதியுள்ளனர். அத்துணைக் கடிதங்களையும் பிரசுரிக்க இயலாது, பக்கங்கள் இல்லாமையினால். ஒரு அன்பரின் கடிதம் மட்டும் இங்கு பிரசுரித்துள்ளது.

இந்தக் கடிதம் உணர்த்தும் ஒரு உண்மை, "மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சியாளர்கள், மக்களின் கோரிக்கையைப் புறக்கணித்தால், அவர்கள் எந்த உயர் பதவியில் இருந்தாலும் கடும் கண்டனத்துக்கு உட்பட்டவர்களே ஆவார்கள்" என்பது தெரிகிறது. இனியும் ஆளுநரின் பதிலை எதிர்பார்ப்பதில் எவ்வித பலனுமில்லை! நம்முடைய நியாயமான கோரிக்கையை 'ஏன், எதற்கு' என்று கூட கேட்டு செயலாற்ற முடியாத அளவுக்கு அலட்சியமும், ஆணவமும், அக்கறையின்மையும் கொண்ட ஆளுநரை கண்டிப்பதில் எவ்வித தவறுமில்லை. இத்தகு பொறுப்பற்ற முறையில் நடக்கும் ஆளுநர் அவர்களை, நமது கண்டனக்குரல் மூலம் ஏன் பதவியினின்று விரட்டக் கூடாது? **சிந்தித்து கண்டனக் கடிதங்களை தமிழக முதல்வருக்கு அனுப்புங்கள்!**

— துணை ஆசிரியர்.

சிவப்பு விளக்கின் கதை தொடர்ச்சி:

கடந்த இதழில், ‘சிவப்பு விளக்கின் கதை’ என்ற தலைப்பில் வெளியான ‘அண்ணா மருத்துவ மனை’ செய்திகளைப் பற்றிய விபரங்களை வெளியிட்டது நினைவிருக்கலாம். அந்த செய்திகள் அனைத்தும் உண்மையிலேயே நடந்தவை தானா? என்று அறிய வேண்டி, அந்த செய்திகளுடன் தொடர்புடைய

மேதகு. ஆளுநர்,
அமைச்சர். சாதிக்பாட்சா,
திரு. எஸ் ஏ. சுபான்,
திரு. பு. மு. வேணுகோபால்,
அமைச்சர். நெடுஞ்செழியன்,
அமைச்சர். அன்பழகன்,
திரு. குருசிரோன்மணி,
திரு. J. A. அம்பாசங்கர்

ஆகியோருக்கு கீழ்க்கண்டவாறு கடிதம் எழுதியிருந்தோம்.

Most Respected Sir,

An urge through widespread revolution all over Tamil Nadu has stated for a change in " Siddha System of Medicine ". At this stage, we have received some news regarding the appointment of the Director of Indigenous Medicine, Tamil Nadu" We have published the news in our monthly medical journal ‘ Mooligai Mani ’ and a copy of the same is enclosed for your kind perusal.

We understand that you are also concerned about the subject. As such, we desire and request you that you will kindly apprise us about the further details and your esteemed opinion on the subject for publicity through our monthly journal " Mooligai Mani " for information of the readers and other public interested in the development of Indigenous Medicine in Tamil Nadu. We will be awaiting your esteemed reply within 10 days of receipt of this letter.

Thanking you in anticipation,

With profound regards,

Yours faithfully,
Dr. A. R. Kannappar,
Editor : Mooligai Mani,

2—6—72
Vellore. N. A.

மேற்கண்டவர்கட்கு 2—6—72 அன்று எழுதிய ஷ கடிதத்திற்கு இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி! என்பது போல் சித்த மருத்துவ டைரக்டர் நியமனத்திலும், பெயர் மாற்றம் விவகாரத்திலும் நடந்த முறையற்ற செயல்கள் உள்ளபடியே நடந்தவைகள் தான் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் மௌனத்தின் மூலம் வாசகர்கள் திடமாக நம்பலாம்.

இயக்குனரைப் பற்றிய பேட்டிக் கட்டுரை :

சொல்வதற்கு என்ன இருக்கிறது?

கடந்த இதழில் அறிவித்தவாறு இந்திய மருந்துவ இயக்குனர் திரு. சுபான் அவர்களை கடந்த 5-5-72 அன்று சந்திக்கச் சென்றேன்.

என்னை முதலில் வரவேற்றது 'சிவப்பு விளக்கு' டன் கூடிய திரு. சுபானின் பெயர்ப் பலகை. என் வருகையை அறிவித்து சுமார் பதினைந்து நிமிடம் கழித்து உள்ளே நுழைந்தேன். திரு சுபான் அவர்களின் கையில், அப்போது வெளியாகி இருந்த மூலிகை மணியின் 'சிவப்பு விளக்கு' கட்டுரை இருந்தது. பக்கத்தில் ஆயூர்வேத டாக்டர் நாராயணசாமி இருந்தார். இருவரும் தீவிரமாக 'எதைப் பற்றியோ' பேசிக்கொண்டிருந்தனர்.

"நான் பேட்டியை ஆரம்பிக்கலாமா?" என்றேன். "என்ன பேட்டி, என்னைப் பற்றித்தான் எட்டு பக்கத்திற்கு 'Damage' செய்து எழுதிவிட்டீர்களே, இன்னும் 'சொல்வதற்கு என்ன இருக்கிறது?' என்று என்னை நோக்கிக் கேட்டார். (நல்ல காலம் நெற்றிக் கண் மட்டும் அவருக்கு இருந்திருந்தால், நக்கீரனுக்கு ஏற்பட்ட கதி எனக்கு ஏற்பட்டிருக்கும்).

நான் சொன்னேன், " Mr. Director, as a journalist, I have to publish all the matters which I gather from public. Whether it is constructive or destructive. In the same manner, I published the news and views of some doctors about you. You are in full liberty to refuse it. So, don't be angry with me" என்று கூறினேன். இப்படிக் கூறிய பின்னரும், அவர்,



எப்படி இருந்தாலும், நீங்கள் எழுதிய இந்த 'சிவப்பு விளக்கு' அண்ணா மருத்துவ மனையைப் பற்றியும், என்னைப் பற்றியும் Damage ஆக எழுதிய பிறகு, நான் எப்படி பேட்டி கொடுப்பது என்றார்.

மிஸ்டர் டைரக்டர், நான் கேட்க வந்தது உங்களைப் பற்றியோ உங்களின் பதவி நியமனத்தைப் பற்றியோ அல்ல! இந்த அண்ணா மருத்துவ மனை துவங்கி ஓராண்டு ஆகியதே, இதுவரை என்னென்ன சாதனைகள் புரிந்துள்ளன? என்று கேட்க வந்தேன். எனவே, அதைப் பற்றி மட்டும் பேசுங்கள் என்றேன்.

அதற்கு அவர், மறுபடியும் எதை எதையோ பேசி குழப்பினார். பேட்டியளிக்கவும் மறுத்து விட்டார். பின்னர் நான் விடைபெற எழுந்தேன். இது வரை பக்கத்தில் அமர்ந்து கொண்டிருந்த ஆயூர் வேத டாக்டர். நாராயணசாமி அவர்கள், என்னைப் பார்த்து, " சார், நான் இந்த டிஸ்கஷனில் தலையிடுவதைப் பற்றி பத்திரிக்கையில் போட்டு விடாதீர்கள்! என்று என்னைக் கேட்டுக் கொண்டு பின்,

டாக்டர். சுபான் அவர்களை பேட்டித் தருமாறு 'அறிவுரை' கூறினர். அவர் கூறிய பின்னர் தான், திரு. சுபான் அவர்கள், "மிஸ்டர் வெங்கடேசன், நான் என்ன சொல்ல வேண்டும் — கேளுங்கள்" என்று என்னைக் கேட்டார்.

"சார்! இன்று நீங்கள் குழப்பமாக இருக்கிறீர்கள். நாளை 11-மணிக்கு வருகிறேன் அப்போது பேட்டி தாருங்கள்" என்று விடை பெற்றுக் கொண்டு வெளியேறினேன்.

அன்றைய நிகழ்ச்சியிலிருந்து நான் அறிந்து கொண்டது, திரு. சுபான் அவர்கள் தன்னிச்சையாக நடப்பவர் அல்ல! அவருக்கு மேலே ஒரு சக்தி உள்ளது. அந்த சக்தி என்ன செய்யச் சொல்கின்றதோ. அதன்படி நடப்பவர் போலும். அந்த சக்தி தான் ஆயுர்வேத டாக்டர். நாராயணசாமி. இப்படிப்பட்ட ஒரு இயக்குனர் எப்படி சித்த மருத்துவத்தினை வளர்க்கப் போகிறார்?" என்று எண்ணமிட்டேன்.

மறு நாள் 11-மணிக்குச் சென்றேன். முற்றிலும் மாறுபட்ட முறையில் திரு. சுபான் அவர்கள் வரவேற்றார்கள். குரலிலும் நெகிழ்ச்சி, முகத்திலும் மலர்ச்சி. பேட்டியைத் துவங்கினேன்.

டைரக்டராவதற்கு முன் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி கேள்வி கேட்டபோது பதில் சொல்ல மறுத்து விட்டார்.

அண்ணா மருத்துவ மனை, பற்றிய குறிப்புகளை மட்டும் தந்தார். சித்த மருத்துவ வளர்ச்சித் திட்டங்களை அமைச்சர் அன்பழகன் கூறியது போல் தந்தார்.

வேறொன்றும் விசேடமாக அவர் பதில் தரவில்லை. ஒரே ஒரு வாக்கினை மட்டும் என்னால் பெற முடிந்தது.

"எங்களது பெயர் மாற்றப் போராட்டம் பற்றி என்ன சொல்கின்றீர்கள்? உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை உண்டா?"

எனக்கு அதைப் பற்றி ஆட்சேபனை ஏதுமில்லை. 'அறிஞர் அண்ணா' பெயரை வைக்க வேண்டும் என்று நான் தான் சொன்னேன். எனவே, இந்த 'பெயர் மாற்றம்' செய்யச் சொல்லி எனக்கு உத்தரவு வந்தால், 'இப்பொழுதே மாற்றி விடுவேன்' என்றார்.

"இதற்கு யார் தடை?" என்று கேட்ட பொழுது, "இந்த கேபினட் தான் தடையாக உள்ளது. அமைச்சர்கள் தான் வேண்டாம் என்று கூறுகின்றனர். நாங்கள் எப்போதும் தடையாக இல்லை. இப்பொழுதே அமைச்சர் பெயரை மாற்றச் சொன்னால் நான் மாற்றத் தயாராக இருக்கிறேன்" என்றார். இது ஒன்று தான் திரு. சுபான் அவர்களிடமிருந்து பெற்ற பலனுள்ள பதில்.

பேட்டியை முடித்துக்கொண்டு, அண்ணா மருத்துவ மனையில் சிகிச்சை பெறும் 100 நோயாளிகள் கொண்ட மருத்துவ மனையை, டாக்டர். டி. பி ராசகோபால் அவர்களின் துணைக்கொண்டு சுற்றிப் பார்த்தேன்.

"அண்ணா மருத்துவ மனையை அமைத்து. அதனை திறம்பட நடத்தி வரும்" அனைவரையும், முதலாக அரசினரைப் பாராட்ட என் உள்ளம் விழைந்தது.

ஒரு வழியாக பேட்டியை முடித்துக் கொண்டு வெளியே வந்து ஒரு புத்தகக் கடையில் வார இதழ் ஒன்றினை வாங்கிப் புரட்டினேன். புரட்டிய பக்கத்தில் பாகிஸ்தானின் பழைய அதிபர் யாகியாகானின் புகைபபடத்துடன் ஒரு குறிப்பு வெளியாகி இருந்தது. வங்காள தேசப் போர் நடைபெற யாகியாகான் காரணமாக இருந்தாலும், அவரை ஆட்டிப் படைத்தவர் பாகிஸ்தானில் இருந்த 22 பெரும் பணக்கார குடும்பங்கள் தானும். அவர்களால் தான் வங்காள தேச போரே உண்டாயிற்று" என்று அந்த குறிப்பு கூறியது.

எனக்கு இதனைப் படித்தவுடன் வந்த ஞாபகம், திரு. சுபானின் பேட்டி நிகழ்ச்சியே. திரு. சுபான் அவர்கள் யாகியாகான் போன்றவர். எதையும் தன்னிச்சையாக செய்ய மாட்டார் போலும். செய்பவராய் இருந்திருப்பின், டாக்டர். நாராயணசாமியின் அறிவுரைக்குப் பின் எனக்கு பேட்டி அளித்திருக்க மாட்டார். தாமாக செய்திருக்க வேண்டிய ஒரு சாதாரண செயலைக் கூட ஒரு ஆயூர்வேதக்காரரின் அறிவுரைக்குப் பின்னரே செய்யும் இயக்குனர் சுபான் அவர்களைப் பற்றிச் **சொல்வதற்கு என்ன இருக்கிறது?**

யாகியாகான் 22 பணக்காரர்களிடம், பதவிக்காக மாட்டிக் கொண்டு அவர்கள் சொல்வதற்கெல்லாம் ஆடியது போல், திரு. சுபான் அவர்களும் ஆயூர்வேதக்காரர்களின் ஆதிக்கத்தில் மாட்டிக் கொண்டுள்ளார் என்றே தெரிகிறது. அவரின் அந்த நிலை, அவரது பேட்டியின் போது நன்ருகத் தெரிந்தது.

யாகியாகான் முடிவு பற்றி உலகமே அறியும்!

பி. கு. :— இந்த பேட்டியின் போது உடனிருந்து உதவிய டாக்டர். நாராயணசாமிக்கும் பேட்டியளித்த இயக்குனர் சுபான் அவர்கட்கும் மருத்துவ மனையை சுற்றிக் காட்டி விளக்கிய டாக்டர். ராசகோபால் அவர்கட்கும் எனது நன்றியை, வாசகர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

— துணை ஆசிரியர்.

பொன்னாவிரை

(149-வது மூலிகை)

ஆவாரை இனத்தைச் சார்ந்த இந்தச் செடியும் எங்கும் ஏராளமாகத்தான் இருந்தது. பொன்னாவிரை, பேயாவாரை, பெண்ஆவாரை பேயாவிரை என்று தான் கிராம மக்கள் இதனை சொல்வழக்காக அழைப்பார்கள். ஏறத்தாழ பூக்கள் மட்டும் ஆவாரைக்கும், பொன்னாவாரைக்கும் ஒரே விதமாகக் காணும். ஆனால் இலையில் சிறிது வித்தியாசப்படும். அதாவது அகத்தி இலைக் காம்பு போல் விட்டு இலையின் நுனி வட்டமாக இல்லாமல் கூர்மையாக இருக்கும். காய்: ஆவாரைக் காய் தட்டையாகவும் அகலமாக உலர்ந்தால் சப்தம் காணும். பொன்னாவிரையின் காய் பெரிய கொத்தவரைக்காய் போல் விதை நல்ல சதைப்பற்று உள்ளதாகி இருக்கும்.

ஆங்கிலேயர் இதனை நீக்ரோ காப்பி என்பார்கள். ஒருவேளை ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள நீக்ரோவர்கள் இதனைக் காப்பி போல வைத்து பருகுவார்கள் போல் தெரிகிறது. எனவே பொன்னாவிரையின் விதையை காப்பி போல வறுத்து இடித்து பாலுடன் சேர்த்து நமது நாட்டு கிராம மக்களும் பருகும் பழக்கம் இருந்து வருகிறது.

ஆவாரை இனச் செடிகளில் பொன்னுவிரை, நிலாவிரை, ஊசித்தகரை ஆகிய மூன்று இனங்களுக்கும் ஒரு சில குணங்கள் ஒன்ருக இருக்கும்.

குணநிசயம்

பொன்னுவிரைக்கு சிறுநீரைப் பெருக்குவதில் நெருஞ்சில் செடியைப் போலும், உடலில் உள்ள விட பூரிதங்களை முறித்து விடுவதில் அருகம்புல், நீலி (எ) அவுரியைப் போலும் வேலை செய்யக் கூடியதாகும். பொன்னுவிரையின் விதையின் மணமும் குணமும் ஏறத்தாழ காப்பிக்கொட்டைக்கு உள்ள தன்மை போல் இருப்பதால் இதனை ஆப்பிரிக்க நாட்டிலும், நமது கிராமங்களிலும் காப்பி போல பருகும் பழக்கம் இருந்து வருகிறது. பொதுவாக பொன்னுவிரை இலை, விதை, வேர்கள் மருத்துவப் பயனுகிறது.

உணவுடன் இலை

பொன்னுவிரை இலையை பருப்புடன் சேர்த்து பொரியல், கடையலாகச் செய்து சாப்பிடும் பழக்கம் இன்றும் இருந்து வருகிறது. இதனுல் என்ன குணம் என்று கேட்க, அகத்திகீரைக்கு உள்ள குணம் இதற்கும் உண்டு. மேலும் உடம்பு நீரா ஊதிப்பெருத்து போனவர்கள் இதை வாரம் ஒரு முறை சாப்பிட்டால் மலம், சிறுநீர் நிறைய கழிந்து உடம்பு வற்றிப்போகும். நோய் அணுகாது என்று அனுபவப்பட்ட கிராம மக்களின் வார்த்தைகள். பொன்னுவாரை இலையை சமைத்துச் சாப்பிட அன்று இரண்டு மூன்று தடவை பேதியாகும். மேலும் சிறுநீர் தாராளமாக கழிகிறது. எனவே உடம்பில் உள்ள விடமித்த நீர்களை தடையின்றி வெளியேற்ற உதவுகிறது.

முறிவு முறை

நவீன ஊசி மருந்து மாத்திரைகளின் வேகம், பின்விளைவுகள் தீர இந்தப் பொன்னுவாரையும் நல்ல முறிவு மருந்தாகப் பயன்படும். அருகம்புல், மிளகு, சீரகம், ஆங்கில மருந்துகளை யெல்லாம் முறித்து விடுவது போல இந்த பொன்னுவாரை இலையும், வேரும், சிறிது மிளகு சேர்த்து அரைத்து காலை வேளை ஒரு நெல்லிக்காய் அளவு உருண்டை உள்ளுக்குச் சாப்பிட்டு பசும்பால் குடிக்க ஊசி மருந்து, மாத்திரைகளால் விளைந்த விடம் உடம்பில் இருந்து முறிவு ஆகும்.

மலச்சிக்கல் நீங்க

பொன்னுவாரை இலையும் விதையும் அரைத்து மை போலாக்கி எலுமிச்சை அளவு வெந்நீரில் கலந்து குடிக்க பேதியாகும். உடலில்

உள்ள விட நீர்கள் யாவும் நீர் மலத்துடன் வெளியேற்றி உடல் கனத்தையும், வாத பித்த கபங்களை சமப்படுத்தி நோயணுகாமல் உடலைக் காக்கும் என்பதை திடமாக நம்பலாம்.

மலச்சிக்கலை நீக்க மிளகாய் பூண்டும் ஓர் அரிய மூலிகை. ஆனாலும் மிளகாய் பூண்டு குழந்தைகளுக்கும் — பொன்னுவாரை பெரியோர்களுக்கும் உண்டான மலச்சிக்கலை நீக்க உதவும் என்பதை வாசக அன்பர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

பித்தப் பாண்டு நோய்கட்கு

பொன்னுவாரை வேர் 50 கிராம் சுக்கு, மிளகு சீரகம் வகைக்கு 10 கிராம் தட்டிப் போட்டு மண் சட்டியிலிட்டு 4 குவளை நீர் விட்டு 2 குவளையாக நீர் வற்றக் காய்ச்சி வடித்த குடிநீரை தினம் ஒன்றுக்கு 4 வேளை அரை குவளை வீதம் குடித்துவர கல்லீரல், மண்ணீரல் கோளாறுகளால் வந்த பித்தப் பாண்டு, சோகை, நீரேத்தம், வீக்கம் யாவும் 1 வாரத்தில் உடலை விட்டு நீங்கும்.

மஞ்சள் காமாலை நீங்க

பொன்னுவாரை இலையுடன் கீழாநெல்லியும், மிளகு 6 சேர்த்து மை போல் அரைத்து நெல்லி அளவு காலை மாலை வாயிலிட்டு வெந்நீர் குடித்துவர மஞ்சள் காமாலை நீங்கும். இச்சா பத்தியம்.

சொறி சிரங்குகளுக்கு

பித்த மிகுதியால் வரும் சொறி, சிரங்கு, நமைச்சல் ஆகியவை கட்கு பொன்னுவாரை இலையை சிறிது மஞ்சள் சேர்த்து அரைத்து உடம்பின்மேல பூசி 15 நிமிடம கழித்து பாசிப்பயறு மாவு தேய்த்துக் குளிக்க சொறி சிரங்குகள் எல்லாம் உடம்பை விட்டு ஒழியும்.

பொன்னுவாரையும் அகத்தியனார் ஆசி பெற்ற மூலிகையாக கர்ணபரம்பரை வழக்கு. பொதுவாக பொன்னுவாரை, அருகம்புல், நீலி என்ற அவுரி வேர் ஆகியவைகளைப் போல எந்த காரணத்தால் உடம்பில் ஏறிய விட பூரா நீர்களை வெளியேற்ற உதவும் அரிய மூலிகை என்பதை மட்டும நினைவில் கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

மேனாட்டவரும் இதன் பெருமையை உணர்ந்து காய்ச்சல்களை கட்டுப்படுத்த இதன் விதையில் இருந்து திராவகமாக (Tincture) காய்ச்சி மருத்துவப் பயனாக்கி வருவதையும் இங்கு குறிப்பிட விரும்பு கிறேன் எவருலும, பொன்னுவாரையை நமது நாட்டு மக்கள் நேரிடையாகவே உணவு மருத்துவமாக பயன்படுத்துவது, எளிய முறை! அரிய பயன்!! நிரந்தர குணம்!!! என்பதை பெருமையுடன் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். ●

உ



— முன் மாதத் தொடர்ச்சி

நாள்பட்ட சீதபேதி நிற்க

அரிசி, தேங்காய்ப் பால், அந்தரத் தாமரை இலை, இவைகளை சமமாக ஒன்று கூட்டி சமைத்து சாப்பிட்டுவர வருடக்கணக்கில் ஆகும் சீதபேதி நிற்கும்.

காதுநோய், காதுகுத்தல் சீழ்வடிதல் நிற்க

ஒரு டீஸ்பூன் அளவு நல்லெண்ணெய், அரிசி அளவு அபினி, கத்தூரி வேர்ப்பட்டை, மரப்பட்டை, ஒரு சிறிய துண்டு சுக்கு சேர்த்து காய்ச்சி ஒரு துளி வீதம் காதில் விட்டுவர காது சம்மந்தப்பட்ட நோய்கள் யாவும் விலகிவிடும்.

மேக வெள்ளைப் போக்கு நிற்க

அருநெல்லிக்காய்ச் சாறு, பச்சை திராட்சை ரசம், வெள்ளை வெங்காயச் சாறு, வகைக்குச் சமபாகமாக எடுத்துக் கூட்டி அதில் 50 மில்லி. எடுத்து அத்துடன் படிகார பற்பம் 2 சிட்டிகை, சர்க்கரை நான்கு சிட்டிகை சேர்த்துக் கொடுத்துவர காலை மாலை இரு வேளை மூன்று நாளில் மேகத்தால் விளைந்த வெள்ளை ஒழுக்கு நிற்கும்.

வெளி மூலச்சதை அறுவையின்றி கரைக்க

இலுப்பைப் பிண்ணாக்கு, மாட்டுக் குளம்புச் சீவல், குதிரைக் குளம்புச் சீவல் பன்றிப்புட்டைச் சேர்த்து நெருப்பிலிட்டு வரும் புகையை ஆசனத்தின் மீது காட்ட வெளிமூலம் அறுவை சிகிச்சை இல்லாமல் குணம் ஆகும்.

(தொடரும்)



[இப் பகுதியில் வாழ்க்கைக்கு பயன் தரும் எந்தவித கேள்விகளும் இடம்பெறும். கேள்வி கேட்பவர்களின் பெயர் அவசியமிருந்தாலன்றி வெளியிடப்பட மாட்டாது. எல்லோருக்கும் பயன்படும் கேள்விகள் எதுவாயினும் சரி அவைகட்கு முதலிடம் தரப்படும். இப் பகுதியில் ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து வந்த கேள்வி — பதில்களை மருத்துவ சம்பந்தப்பட்ட வரையில் தனியாக "நோயும்-மருந்தும்" எனத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தேவையுள்ள அன்பர்கள் முன்பணம் மணியாடர் அனுப்பி பெறலாம். சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கவனிக்க பட மாட்டாது. கூடியவரையில் மருத்துவம், சமூகம், சமயம் பற்றிய கேள்விகளுக்குத்தான் முதலிடம்.]

* * *

கே: நானும், என் சகோதரனும், கடந்த 2 மாத காலமாக வாய்வுக்குத்தினாலும், மூச்சுப் பிடிப்பினாலும், அவதிப் படுகிறோம். மேல்படி நோய் தீர மூலிகை என்ன?

ப! சுக்கு, நாமக்கட்டி, பெருங்காயம், இவைகளை வெந்நீர் விட்டு உரைத்து வரும் விழுதியை சுண்டை அளவு உள்ளுக்கு நாவில் தடவி, மீதியை மார்பில் தடவி நெருப்பனல் காட்டவும். வாய்வுக்குத்து, மூச்சுப் பிடிப்பு தீரும்.

கே: எனக்கு ஒரு வார காலமாக காலை 7 மணி முதல் 12 மணி வரை இடது கண் புருவத்திற்கு மேல் வலியும், வாந்தி எடுப்பது போல் நிலையும் உண்டாகிறது. இதைப் போக்க ஒரு இலகு மூலிகை சிகிச்சை கூறவும்.

ப: நற்சங்கன் இலையும், நற்சீரகமும் சேர்த்து அரைத்து ஒரு சுண்டை அளவு காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு பால் குடித்து வரவும்.

கே: எனக்கு வயது 38. எனது வலது விதை சில நாட்களில், துவண்டு - தொங்கி வலியுடன் இருக்கும். சில நாட்கள் சரியாக இருக்கிறது, நோய் கிடையாது. இதை தவிர்க்க ஒரு ஆலோசனை கூறவும்.

ப: ஐயா, துவண்டு இருக்கும நேரம் உடல் உஷ்ணம் அதிகமாக இருக்கும். எனவே அதி குளிர்ச்சியான பண்டங்களை விலக்கி விட்டு மித உஷ்ணமான உணவுகளைச் சாப்பிட்டு வரவும் மரத்துக் கீரை இனங்களான முருங்கைக் கீரை, லஞ்சமுண்ட கீரை ஆகியனவைகளை நிறைய அடிக்கடி சாப்பிட்டு வர தவிர்க்கலாம்.

கே: எனக்கு 11-ம் வயதில் வைசூரி நோய் கண்டு கண்களில் பூ விழுந்து மறைத்துவிட்டது. இப்பொழுது வயது 19 ஆகிறது. இடது கண்ணால சிறிது பார்வை தெரிகிறது. இதற்கு நேத்திரப் பூண்டு தைலம போட்டு வரலாமா? பூரணகுணம் ஏறபடுமா? எவ்வளவு காலம் தைலம் உபயோகிக்க வேணடும?

ப: நேத்திரப் பூண்டு தைலம் போடுவதற்கு முன்பு, நீங்கள் பச்சை அருகம்புல்லை சுத்தமாக காரம் இல்லாத அம்மியில் அரைத்து காலை பூ விழுந்த கண்ணில் 4 துளி விட்டு வாருங்கள். ஒரு மாதத்தில் குணம் காணாவிட்டால், பிறகு நேத்திரப் பூண்டு தைலம கண்களில் விட்டு வரலாம்.

கே: எனக்கு வயது 19 (ஆண்) இரவில் சீக்கிரம் தூக்கம் வந்து விடுகிறது. விடியற்காலையில் விழித்து 1 மணி

நேரம் கழித்து, மீண்டும் தூக்கம் வருகிறது. படுக்கையை விட்டு எழுநதிருக்க அசதியும உடம்பு வலியும் தோன்றுகிறது. இந்த நிலையை போக்கி, நல்ல சுறுசுறுப்பாக இருக்க வழி கூறுங்கள்.

ப: விடியற்காலை விழித்தவுடன் குளிர்ந்த நீரைத் தலையில் கொட்டிக் கொள்ளவும். குளித்த பின்பு திருநீரை நெற்றியில் பூசி ஏதாவது ஒரு இறைவன் பாடலை பாராயணம் செய்து விட்டு பாருங்கள்! தூக்கம் தலை காட்டாது. மூதேவி கங்காதேவி முன் நிற்கமாட்டாள். முயற்சி செய்து வெற்றி பெறுக.

கே: எனக்கு வயது 37 ஆகிறது. வளைந்து குனிந்து வேலை செய்தால் நிமிர முடிவதில்லை. கொஞ்ச நேரம் சிரமப் பட்டு பிறகு நிமிர வேண்டும். ஒரு காலில் வெடிப்பு அதிக மாகவும், மற்றொரு காலில் குறைவாகவும் இருக்கிறது. முழங் கால், கணுக்காலில் வலி உள்ளது. வயிற்றில் சிறு புழுக்கள் இருக்கின்றன.


பப்பாளி



ப: எல்லா வித தொல்லைக்கும் வாதநாராயணன கீரையை ஆமணக்கெண்ணெயுடன் வதக்கி வாரம் ஒரு முறை சாப்பாட்டில் கலந்து 10 வாரம் சாப்பிட யாவும் நீங்கிவிடும்.

கே: சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்பு என் உடல் மிகவும் மெலிந்து ஒல்லியாக இருந்தது. தற்சமயம் மிக அதிக பருமனாக உள்ளது. பருமனை போக்க வழி?

ப: முருங்கைக் கீரையும் அரைக்கீரையும் மாற்றி மாற்றி உணவுடன் சாப்பிட்டு வருக. அத்துடன் பப்பாளிப் பழம் 2 துண்டு சாப்பிட்டு வரவும்.

பொடுதலை

கே: என் தாயார் வயது 40. பச்சரசி, புழுங்கலரிசி கஞ்சிதான் ஜீரணமாகிறது. கேழ்வரகு கூழ் சாப்பிட்டாலும் பேதியும் அஜீர்ணமும் உண்டாகிறது. சாதமாகவோ, இட்லி, தோசையாகவோ, ரொட்டியாகவோ சாப்பிட்டால், வயிற்று உப்பசம், வலியும் உண்டாகிறது. குடலைப்பற்றிய இந்த நோய்க்கு, ஒரு இலகு முறை வைத்தியம், உணவு திட்டம் கூறவும்.

ப: பொடுதலைக் கீரையை மிளகு தூள் போட்டு பொறியல் செய்து பகல் உணவில் சாப்பிட்டுவர வயிற்றுக் குடல் கோளாறுகள் யாவும் சரியாகும்.

கே: என் வயது 65. வெய்யில் அதிகமாக இருப்பதால் பலவீனம் அதிகம் ஏற்பட்டிருக்கிறது. தலைவலியும், கண் எரிச்சலும் விடாமல் இருக்கிறது. ஒல்லியான உடல் அமைப்பு உள்ளவன். வெளியில் அதிக தூரம் நடந்து போவதற்கோ,

ஒரு வேலையை செய்வதற்கோ, சக்தி குறைந்துவிட்டது. வேட்கையும், தாகமும், தூக்கமின்மையும் இரவில் ஏற்படுகிறது. இதை தடுக்க ஒரு தக்க மருத்துவ முறையை தங்கள் இதழ் மூலம் அறிவிக்கவும்.

ப: 20 நாளைக்கு வெண்பூசனிக் (கல்யாணப் பூசனி) காய் சாம்பார் நெய் விட்டு சாப்பிட்டு வரவும். தலைவலிக்கு சுக்கு நாமக் கட்டி பெருங்காயம் உரைத்து பற்று போட்டு வரவும். பூசனிக்காய் குளிர்ச்சி என்று பயந்து விட்டுவிட வேண்டாம். இரண்டொரு நாள் அப்படித்தானிருக்கும். பிறகு சரியாகி விடும்.

கே: 'அள்ளு மாந்தம்' என்று சொல்லும் நோய் கண்ட 6 மாத குழந்தைக்கு, மூலிகை சிகிச்சையும், பத்தியமும் விளக்கமாக தெரியப்படுத்தவும். ஜுரம் அடிக்கடி வருகிறது.

பராசக்தி (என்ற) வேம்பு

நொச்சி

ப: வேப்பீர்க்கு, நுணுவீர்க்கு, நொச்சியீர்க்கு, உத்தாமணி, பொடுதலை, மிளகு, சீரகம் இவைகளை வகைக்கு 50 கிராம் தட்டிப் போட்டு மண் சட்டியில் அரை லிட்டர் தண்ணீர் விட்டு பாதியாக சுண்டக் காய்ச்சி 2 மணி நேரத்திற்கு ஒரு சங்களவு உள்ளுக்கு கொடுத்து பால் கொடுத்துவர நீங்கும்.



கே: சிறுநீரில் உப்பு அதிகமாக இருந்தால், அதனுல் உடலுக்கு ஏற்படும் கெடுதிகள் என்ன? அதை போக்குவது எப்படி? அதே போல், சர்க்ரை அதிகமாக இருப்பின் அதை குறைத்து உடல் நிலையை சரிப்படுத்துவது எப்படி? தங்கள் மூலிகை மருத்துவ முறையைக் கூறவும்.

ப: இது சிக்கலான கேள்வி. விளக்கம் தர இடம் போதாது. உப்பு வியாதியை பாண்டு, சோகை என்பார்கள். சர்க்கரை இருந்தால் இதற்கு நீரிழிவு நோய் என்பார்கள். இரண்டும் வெவ்வேறு நோய், வெவ்வேறு மருந்துகள். உடல் நிலைக்கு ஏற்றபடி தேர்வு செய்ய வேண்டிய வியாதியை இரண்டும் ஒன்ருகக் குழப்பிவிட்டால் பயன் இராது. எனவே இது பற்றி விரிவாக பின்பு மூலிகை மணியில் வெளியாகும்.

கே: 'வேலிக்காத்தான்' என்ற செடி நாட்டில் அதிகமாகி, பயிர்களுக்கு விஷம்போல், ஒரு பெருத்த சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. அந்த முள் இனத்தை சேர்ந்த செடிகளை அழிக்க வழி உண்டா? அந்த முள் குத்திவிட்டால், அதற்கு வைத்தியம் என்ன?

ப: இந்தக் கேள்வி தான் என்னையும் திணர அடிக்கிறது. இது நம் நாட்டைச் சேர்ந்த மூலிகையாக இருந்தால் இந்த செடிக்கு கொஞ்சமாவது இரக்கம், கருணை போன்ற குணமிருக்கும் எங்கும் ஏராளமாக "பிசாசு" போல் தண்ணீர் இல்லாவிட்டாலும் அந்த

இடத்தில் வேகமாக, செழிப்பாக வளர்ந்து, நல்ல பயிர் இனங்களை, மூலிகை இனங்களை அழித்து வருகிறது. அந்த முள் குத்தி காயம் ஏற்பட்டால் மருந்து போட்டும் ஆற முடியாமல் பலர் இறந்தும் வரு கின்றனர். அரசு இந்த முள் செடியை வளர விடாமல் தடுக்க தக்க நடவடிக்கை எடுத்து, மக்களும் ஒத்துழைத்தால் தவிர இந்தசெடியை யாராலும் ஒழிக்க முடியாது.

கே: இரும்பு கருவிகளினால், (கத்தி, பிளேடு, ஆணி) காயம் ஏற்பட்டால், அதற்கு மூலிகை சிகிச்சை என்ன என்பதை கூறவும்.



குமரி (என்ற) சோற்றுக்கற்றாழை



செம்பை

ப: சோற்றுக் கற்றாழையை எடுத்து அதில் சாறு எடுத்து காயத்தில் விட்டு சிறிது நேரம் கழித்து அலசி, கருஞ்செம்பை இலையை விளக்கெண்ணெய் விட்டு வதக்கி இளம் சூடாக இருக்கும் போது கட்டி விடவும் 3 நாளில் ரணம், காயம், புண் ஆறிவிடும்.

கே: புழு வெட்டு - 'சொட்டைத்தலை' அல்லது 'வழுக்கை' என்பதெல்லாம், ஒன்று தானா? அவற்றிற்கு சிகிச்சை முறை கூறவும்.

ப: 'புழு வெட்டு' என்பது தலையில் வட்ட வட்டமாக ரோமம் திடீரென்று விழுந்து விடுவது. சொட்டைத் தலை அல்லது வழுக்கை என்பது பரம்பரையாகவே தொடர்ந்து வரும் தலை வழுக்கை குறிப்பிட்ட வயதிற்கு மேல் தலை முன்புறமோ உச்சந் தலையிலோ வட்டமாக ரோமம் விழுந்து மொழு மொழு என்ருகி விடும். இதற்கு இயற்கையாகவே வழுக்கைத் தலை என்பார்கள். மருத்துவத்தில் இதற்கு சிகிக்சை கிடையாது. ஆனல் புழு வெட்டு என்பதற்கு சிகிக்சை உண்டு,

கே: சாதாரணமாக மக்கள் (சிறுவர், வயோதிகர்) கடும் வெய்யில் பொறுக்க முடியாமல் தவிககிருர்கள். உடலுக்கு தக்க உணவு வகைகயை எப்படி வைத்துக் கொண்டால். சற்று குணம் காணலாம் என்பதை கூறவும்.

ப: காரம், உரைப்பு, புளிப்பு இவைகளை மட்டுப் படுத்தி, குளிர்ச்சியான ஆகார வகைகளை மட்டும் சேர்த்து வந்தால் கடும் வெய்யிலில் உடபபு பாதிக்காது.

கே: 'ஆகாசத் தாமரை' 'நில வேம்பு என்ற மூலிகை களை எந்த நோய்க்கு உபயோகப்படுத்தலாம்?

ப: ஆகாசத் தாமரை மேக நோய்களுக்கும், நில வேம்பு பித்த நோய்களுக்கும பயன் படுத்துவது சிறப்பு.

கே: என் வயது 20 ஆகிறது. கைகளில் சிறு தடிப்புகள் அடிக்கடி ஏற்படடு மறைந்து விடுகிறது. இதை தடுகக ஒரு வழி கூறவும.

ப: எலுமிக்சம்பழச்சாற்றில் சீரகத்தை ஊறவைத்து உலர்த்தி வைத்துக் கொணடு ஒரு சிறிது வாயிலிட்டு சுவைத்துக்கொண்டே வரவும்.

கே: என் மகனுக்கு வயது 5. அடிக்கடி 8, 9 நாட்க ளுக்கு ஒரு முறையாவது மூக்கில இரத்தம வருகிறது. காரணம் தெரியவிலலே. மூலிகை மருத்துவ முறை கூறவும்.

ப: அருகம்புல் இடித்து அரைத்து காலை ஒரு வேளை நெல்லி அளவு உள்ளுக்கு கொடுத்து ஆழாக்கு பால் தரவும். ஏழு நாளில் பூரண குணமாகும்.

* * *

புகைப் பிடித்தல் பற்றிய ஆய்வுத் தொடர் கட்டுரை :

இழுக்க... இழுக்க?

[க. வெங்கடேசன், B. SC.,]

— முன் மாதத் தொடர்ச்சி

வெகு ஆர்ப்பாட்டமாக இந்தியர்களின் மனதைக் கவர்ந்த இந்த சிகரெட், கடந்த நூறு ஆண்டுகளில் இந்தியா முழுமையும் நன்கு பரவியதுடன், இந்தியாவின் நிரந்தர வருமானத்தில் பங்கேற்கும் அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

வெண் சுருட்டே வெளியேறு !

எனக்கு 'சிகரெட்' என்ற பெயரைக் கேட்டாலே அருவருப்பாக இருக்கிறது. எனவே அதனைத் தமிழில், 'வெண் சுருட்டு' என்று அழகாகக் குறிப்பிடுவோம். கடந்த இருநூறு ஆண்டுகளாக ஆங்கிலேயரின் கைகளில் செல்லப் பிள்ளையாக தவழ்ந்து வந்த இந்த வெண் சுருட்டு நம் நாட்டில் புகுந்த வேளை சரியில்லை போலும். 'எட்டாமிடத்து சனியன்' என்று சொல்வார்களே, அந்த எட்டாமிடத்து சனியன் வெண் சுருட்டினை வேகமாக பிடித்துக்கொண்டான் போல் தெரிகிறது.

எந்த நாட்டில் வேகமாக பிறந்து வளர்ந்ததோ அந்த நாட்டிலிருந்தே வேகமாக இந்த வெண் சுருட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றது. அண்மைக் காலத்தில், அமெரிக்க நாட்டில் மட்டும் இதற்கென்றே அமைக்கப்பட்ட ஆய்வுக் கழகங்கள், நுணுக்கமாக சிகரெட் பற்றி ஆய்வு செய்து, அதன் அபாயத்தினைப் பற்றி அறிவித்து, பொது மக்களையும், அரசாங்கத்தையும் எச்சரித்துள்ளனர்.

New Survey Indicts Smoking!

Smoking has been indentified as a leading cause of health problems. Britain's Royal College of Physicians in their 1971 report, **Smoking and health Now,** positively confirm the fact that smoking increases your chances of sickness and premature death !

Here are some of the results of the study :

* It is estimated that over 20,000 deaths in men between the ages of 35 and 64 in the United Kingdom are directly attributable every year to smoking.

* The average male cigarette smoker, age 35, is likely on the average to lose $5\frac{1}{2}$ years of life as compared with a non-smoker.

* If present smoking habits continue it is estimated that there will be 50,000 deaths from lung cancer alone each year in England and Wales in the 1980's !

* Mothers who smoke during pregnancy tend to have smaller babies than non-smokers. They may be more likely to abort their fetuses, have a still-birth or find their infant dying in the first days of life.

* Cigarette smoking was a detriment to Britain's industry. As a result of long range illnesses linked with smoking, about 50 million working days were lost to industry in a recent year.

The report substantiates the accuracy of findings discovered in similar studies conducted previously in the United States. It points to the validity, for instance, of the Hammond-Horn study which showed that the death rates from all causes combined are 68 ·/. greater for cigarette smokers than for non-smokers.

The conclusions are obvious : **Smoking is determental to health and the habit should be dropped.**

இங்ஙனம் வெளிநாட்டில் உள்ள அறிவியல் அறிஞர்கள், எந்த அளவுச்கு நுட்பமாக ஆய்வு செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு ஆய்வு செய்து, 'சிகரெட்—அபாயகரமானது' என்று கூறியுள்ளனர்.

இன்னொரு பத்திரிகைக் குறிப்பு ஒன்று கீழ்கண்டவாறு சிகரெட் பிடிப்பதால் நுரையீரல் எங்ஙனம் பழுடைகிறது? என்பதைக் குறிப்பிடுகிறது.

" EMPHYSEMA is rated by the U. S. Public Health Service as the fastest growing crippler disease in the United States ! Over 25,000 will die from it this year in the U. S. alone.

Emphysema is a disease of the lungs. It tears down lung tissues and makes the tiny air sacs inefficient! Victims usually die from suffocation and an overworked heart.

There are a number of contributing factors leading to the cause of this disease. But, according to the Public Health Service and many leading doctors, cigarette smoking is the most significant factor in the development of this killer!

What can you do to prevent emphysema? Don't smoke! If you do — quit immediately."

அன்று காந்தியடிகள், பாரத மக்கள் அந்நியரின் அடிமைத் தளையிலிருந்து விடுதலை கோரியபோது, 'வெள்ளையனே-வெளியேறு' என்று முழங்கினர். இன்று விஞ்ஞானிகள், சிகரெட்டுக்கு மக்கள் அடிமையாகி பலியாகி வருவதைக் கண்டு,

"வெண் சுருட்டே — வெளியேறு!"

என்று முழங்குகின்றனர்.

எந்த நாட்டில் தோன்றியதோ, அந்த நாட்டிலிருந்து வேகமாக வெளியேறி வரும் சிகரெட், அன்று வெள்ளையர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தது போல், நுழைந்து வருகின்றது.

எங்கும் வெண் சுருட்டே!

"எங்கெங்கு காணினும் சக்தியடா" என்று அன்று பாரதி, பார்க்கின்ற பொருளில் எல்லாம் சக்தியைக் கண்டான். ஆனால், அந்த கவிஞர் இன்றிருந்தால்,

"எங்கெங்கு காணினும் சிகரெட் புகையடா"

என்று வேதனைக்குரல் எழுப்பியிருபபான். அந்த அளவிற்கு சிகரெட் பிடிப்பவர்கள் நாளும் பெருகி வருவது, நல்ல ஆரோக்கியமான நாட்டிற்கு அறிகுறியல்ல!

அக்கினி தானமா — உயிர் தானமா?

முன்பெல்லாம் நாட்டில் வளமும், நலமும் செழிக்க இறைவனை வழிபட அந்தணர்கள் மந்திர யாகங்களை ஆங்காங்கே நடத்துவார்கள். இதற்கு 'அக்கினி தானம்' என்று பெயர். இந்த அக்கினி

தானம் நாள்தோறும் நடைபெறுவதால் அந்தணர் வீட்டில் எப்போதும் 'புகை மண்டலம்' குடியிருக்கும். இதில் சந்தணம், அகில் போன்ற மணம் கமழும். உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆன்ம அமைதி தரும் இந்த அக்கினி தானத்தால் வரும் புகை!

ஆனல், அந்தணர்களின் இத்தகைய 'அக்கினி தானம்' மறைந்து விட்டது பகுத்தறிவுப் பிரசாரத்தால். மாருக நமது நாட்டு 'நாகரீகக் கனவான்கள்' புதியதொரு 'அக்கினி தானத்தை' சிகரெட் மூலம் துவக்கி விட்டனர். இரவென்றும், பகலென்றும் பாராமல் இந்த சிகரெட்டின் அக்கினி தானம் ஐந்து வயது பாலகன் முதல் அறுபது வயது கிழவன் வரை நடந்து வருகிறது. இந்தப் புதிய அக்கினி தானத்தால் வரும் புகையில், நெஞ்சை அடைக்கும் நெடியுடன் கூடிய நஞ்சு, வெளியிலுள்ள நல்ல காற்றைக் கெடுத்து, நல்வாழ்வையே பாழாக்கி வருகிறது.

◎ "அந்தணர்கள் அன்று நடத்திய அக்கினி தானம் —
நாட்டைப் புனிதமாக்கியது!
ஆன்ம அமைதி தந்தது!!

◎ இன்றைய 'சிகரெட் அக்கினி தானம்' —
நாட்டின் ஆரோக்கியத்தைக் கெடுத்து,
எமனுக்கு 'உயிர்த் தானங்களைப்'
பெற்றுத் தருகிறது அல்லவா?

(தொடரும்)

ஏஜண்டுகள் கவனத்திற்கு

பல ஏஜண்டுகள் முன்னிதழ் பாக்கிப் பணத்தை உடனடியாக அனுப்பி வைக்க கோரப்படுகிருர்கள். பழைய பாக்கியை அனுப்பவில்லையானுல், புதிய இதழ்கள் கண்டிப்பாக அனுப்பப் பட மாட்டாது.

உ
முருகா.

மூலிகைச் செடிகள்

[டாக்டர் ஆ. சண்முகவேலன், M. A.,]

மூலிகை என்றவுடனே, அது மருந்தாகப் பயன்படக்கூடிய செடி, கொடி அல்லது மரம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீர் வளமும், நில வளமும், மலை வளமும், மாண்புடன் பொருந்திய நம் நாட்டில் மருந்துச் செடிகளுக்குப் பஞ்சமில்லை. நம் வீட்டைச் சுற்றிலுமுள்ள தோட்டங்களிலும், கொல்லைகளிலும், வேலிகளிலும் நூற்றுக்கணக்கான மருந்துச் செடிகளும், கொடிகளும் செழித்துக் கொழுத்து வளர்ந்து கிடக்கின்றன. மனிதன் நல்வாழ்வு வாழ இயற்கை அளிக்கும் மருந்துப் பொருள்கள் இவை. இயற்கையில் எளிதாகக் கிடைக்கும் பச்சிலைகள், கீரைகள், செடி கொடிகள், காய் கனி கிழங்குகளையெல்லாம் உணவாகப் பயன்படுத்தி நோய் வராமல் தடுத்து, நீண்ட காலம் உயிர்வாழ, இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ, நம் முன்னோர்களாகிய ஞானசித்தர்கள் அருளிச் செய்த நூல்கள் பல.

ஞானக்கண் பெற்ற சித்தர்கள் ஒவ்வொரு மூலிகையின் தன்மையையும் நன்கு உணர்ந்தவர்கள். ஆகையால் மூலிகைகளை மருந்தாகப் பயன்படுத்தும் விதத்தைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர். அவ்வாறு சித்தர்களின் நூல்களில் குறிப்பிட்ட மூலிகைகள் ஏறக்குறைய 2,500. அவைகளில் சித்தர்கள் மட்டுமே அறிந்த காயகற்ப மூலிகைகள் சில. அவை மலைகளில் கிடைக்கக் கூடியவை. வைத்தியர்கள் மட்டுமே அறிந்து, பயன்படுத்தக் கூடிய நச்சுத் தன்மை வாய்ந்த மூலிகைகள் சில. ஆனால் நச்சுத்தன்மை சிறிதும் இல்லாத யாவரும் விரும்பி எளிதாகப் பயன்படுத்தி நோய்களை நீக்கும் மூலிகைகள் சுமார் 2,000. நம் தோட்டங்களில் கிடைக்கக் கூடியவைகளே அவ்வாறு நோய் நீக்கும் சில மூலிகைகளை எடுத்து உங்கள் குடும்பங்களில் நீங்களே பயன்படுத்தும் சில எளிய முறைகளைப் பற்றி கூறுகிறேன்.

வேம்பின் இலை, ஈர்க்கு, பூ, பட்டை, பிசின், காய், பழம் யாவும் நல்ல மருந்து. வேம்பின் கொழுந்தை அரைத்து சுண்டைக் காய் அளவு உருட்டி சர்க்கரையில் பிரட்டி குழந்தைகட்கு கொடுத்து விழுங்கச் செய்யலாம். காலை, மாலை 5 நாட்கள் கொடுக்க வயிற்றுக்

கிருமிகள் நீங்கி குழந்தை வளர்ச்சி அடையும். ஊரில் அம்மைநோய் பரவிய காலத்தில் குழந்தை முதல் பெரியவர்கள் வரை சாப்பிடக் கூடிய காப்பு மருந்தாகும். வேப்பிலையின் கசப்புத் தன்மையானது பித்தம், வயிற்றுப்புழு, மாந்தம், நச்சுச் சுரம், அம்மைப் புண், சொறி சிரங்கு முதலியவைகளைப் போக்க வல்லது. உடற் பிணிக்கு மட்டு மின்றி, உயிர்ப் பிணிக்கும் மருந்து இது என்று 2,000 ஆண்டுகட்கு முன் சங்க காலத்திலேயே தமிழர்கள் இதனை 'அம்மன் காப்பு' என்று போற்றினர். 'நிம்பம் உயிர்நிலைக்கு நேர்' என்று தேரர் கூறு கின்றார். வேப்பம்பூவைப் பச்சடியோ, துவையலோ செய்து சாப்பிட வாந்தி, மயக்கம், தியக்கம், பித்தக் கிறுகிறுப்பு முதலியவை நீங்கும். குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு வேப்பெண்ணெய் பயன்படுத்த வாதம், இசிவு, சன்னி, சுரம் நீங்கும் என்பதை

"வேம்பின் விதைக்கு விடஞ் சந்திபாதமுதல்
தேம்பி விழந்தோடு மெனத்தேர்"

என்று அகத்தியர் கூறுகின்றார். நூறுண்டு முதிர்ந்த வேம்பின் பட்டையைத் தூள்செய்து நாற்பது நாட்கள் காலை, மாலை, தேனில் குழைத்து உண்ண கண் ஒளி மிகுந்து மேனி அழகு பெற்று உடல் உரம் பெறும் என்று போகர் கற்பவிதி கூறுகின்றது. இதில் நில வேம்பு, சிவனார் வேம்பு, மலை வேம்பு, சர்க்கரை வேப்பு எனப் பல உளதாயினும் மேற்கூறிய மருந்துகளையெல்லாம் சாதாரண வேம்பிலிருந்தே பெறலாம்.

அறுகு ஒரு சாகா மூலிகை. கோடை வெயிலில் அழிந்த அறுகவேர் மழைத்துளியைக் கண்டவுடன் ஓங்கிவளரும். அறுகம் புல்லின் வேர் கால் பலம் எடுத்து மிளகு பத்து சேர்த்து இடித்து நான்கு மடங்கு நீர் விட்டு காய்ச்சி 1 பங்காக வற்றவைத்து வடித்து சிறிது வெண்ணெய் சேர்த்து காலை, மாலை, 9 நாட்கள் குடிக்க உடல் வெப்பம், கண் எரிச்சல், இரத்தக் கொதிப்பு, நீர்க் கடுப்பு, மூலக் கடுப்பு, தலைவலி, மயக்கம், கிறுகிறுப்பு முதலியவை நீங்கி மேனி அழகு பெறும். அறுகம்புல்லுடன் சிறிது வேப்பிலை மஞ்சள் சேர்த்து அரைத்து உடலில் பூசி குளித்து வர சொறி, சிரங்கு, படர்தாமரை முதலியவை நீங்கி மேனி நிறம் பெறும்.

துளசி இலை ஒரு பிடி எடுத்து மூன்று மிளகும் சேர்த்து காலை மாலை மூன்று நாட்கள் உண்ண இருமல், இளைப்பு, நெஞ்சில் கபம் முதலியவை நீங்கும். துளசிச் சாற்றைச் சுடவைத்துப் பாலில் கலக்கி குழந்தைகளுக்குப் புகட்ட சளி, இருமல் நீங்கும்.

வில்வத்தின் இலை, பூ, காய், பழம், வேர், பிசின் ஆகியன வெல்லாம் மருந்துக்கு பயன்படக் கூடியவை. வில்வ இலை இரண்டு கைபிடி அளவு எடுத்து சாறு பிழிந்து பத்து மிளகு. ஒருதுண்டு சுக்கு சேர்த்து, 4 பங்கு நீர் விட்டு 1 பங்காக வற்ற வைத்து தேன் கலந்து கொடுக்க சுரம், வாந்தி, காமாலை வீக்கம் முதலியன நீங்கும். வில்வக் காயை அல்லது பழத்தை எடுத்துச் சுட்டு உள்சதையை பால் விட்டு அரைத்து தலைக்குத் தேய்த்து முழுகிவர கண் எரிச்சல், உடல் வெப்பம் நீங்கும். கண் குளிர்ச்சி அடையும். வில்வப் பழச் சதையை 1 பங்குக்கு 3 பங்கு நீர் விட்டு அரைத்து வடிகட்டி சர்க்கரை அளவோடு கூட்டி ஒரு நாளைக்கு மூன்று முறை அரை ஆழாக்கு குடித்து வர சீதக்கழிச்சல், இரத்தக் கழிச்சல் நீங்கும். உடல் வெப்பம் நீங்கி குடல் வலிமை பெறும். குழந்தைகளின் உட்சூடு நீங்கும்.

எருக்கம் பூ இரண்டு பங்கு, மிளகு ஒரு பங்கு, கிராம்பு அரைபங்கு சேர்த்து அரைத்து உருட்டி மிளகளவு தேனில் குழைத்து கொடுக்க இரைப்பு, இருமல், சுவாசகாசம் உடனே தணியும். எருக்கன் இலை ஒரு பிடி எடுத்து அரிந்து வேப்பெண்ணெயை சுடவைத்து அதில் துவைத்து எடுத்து ஒற்றடமிட கால் கை பிடிப்பு, வலி வாத நோய் நீங்கும். கட்டிகளுக்குக் கட்ட பழுத்து உடையும்.

வசம்பு ஒரு நல்ல மணமுள்ள செடி. பேர்சொல்லா மருந்து அல்லது பிள்ளை மருந்து என்றும் இதற்கு பெயர். வசம்பின் இலையும் மஞ்சளும் சேர்த்து அரைத்து குழந்தைகளைக் குளிப்பாட்டுவதனல் நோய் வராமல் தடுக்கலாம். இயற்கை அளிக்கும் நன் மணத்தோடு குழந்தை மேனி நிறமும் பெறும். இதன் வேரைச் சுட்டுப் பொடித்து வைத்துக்கொண்டு ஒரு சிட்டிகை தேனில் குழைத்துக் கொடுக்க வயிற்றுக் கழிச்சல், பொருமல், மாந்தம், முறைக்காய்ச்சல், வாய்வு முதலியன நீங்கும். குழந்தைகளின் நாக்கு பிழற்சியும் (தெற்றுவாய்) நீங்கும் என்று தேரர் கூறுகின்ருர். ஊரில் வாந்திபேதி உள்ள (காலரா) காலத்தில் இதை வாயிலிட்டு சுவைத்து வருவது தடுப்பு மருந்தாகும்.

தூதுவளை இலை, பூ, காய் கபநோய்க்கு நல்ல மருந்து. தூதுவளை இலையை துவையல், குழம்பு செய்து உண்ண கோழைக் கட்டு நீங்கும். தூதுவளைக்காயை வற்றல் அல்லது ஊறுகாய் செய்து உண்ண கண் ஒளி பெறும். தூதுவளை இலை, ஆடாதொடை இலை, சங்கன் இலை, கண்டங்கத்திரி இலை, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு ஒரு பங்கு எடுத்து இடித்து 4 பங்கு நீர் விட்டு ஒரு பங்காக வற்ற

வைத்து காலை மாலை 1 அவுன்சு தேன் விட்டு மூன்று நாள் குடிக்க கப சுரம், இருமல், இரைப்பு, சளிக்கட்டு முதலியவை நீங்கும் அல்லது அவைகளை நிழலில் உலர்த்திப் பொடி செய்து வைத்துக்கொண்டு 2 சிட்டிகை தேனில் குழைத்து உண்ணலாம். கக்குவான் இருமலும் நீங்கும்.

தும்பை இலைச் சாற்றினால் இருமல், கபம் முதலியவை நீங்கும். தும்பை வேர், பூ, இலை முழுவதையும் சாறு எடுத்து மிளகு சேர்த்து எண்ணெயிலிட்டுக் காய்ச்சி முழுகிவர தலைவலி, நீரேற்றம், பீனிசம், முதலியவை நீங்கும். தும்பைப் பூவை ஒரு கைபிடி எடுத்து பாலில் வேகவைத்துப் பிழிந்து எடுத்து விட்டு பாலைக் குழந்தைக்குப் புகட்ட கபசுரம் நீங்கும். குழந்தைகளுக்கு கைகண்ட மருந்து.

சீந்தில் மரங்களில் அடர்ந்து கிடக்கும் கொடி வகையைச் சேர்ந்தது. அமிர்தவல்லி என்றும், சாகாமூலிகை என்றும் இதற்குப் பெயர். முற்றிய சீந்தில் தண்டை எடுத்து மேல் தோலைச் சீவிவிட்டு உலர்த்திப் பொடி செய்து கொள்ளவும். சீந்தில் பொடி 3 பங்கு, கடுக்காய்த் தோல், நெல்லி வற்றல், அதிமதுரம், சுக்கு, மிளகு, வகைக்கு 1 பங்கு எடுத்துப் பொடி செய்து காலை மாலை 2 சிட்டிகை 40 நாட்கள் உண்டு வர முறை சுரம், நீரிழிவினால் ஏற்படும் தாகம், உட்சுரம் முதலியவை நீங்கி உடல் உரம் பெறும். மது மேகம் வராமல் தடுக்கும்.

கீழ்க்காய் நெல்லி எங்கும் கிடைக்கக் கூடியது. இதன் இலை வேர் அரைபலம் அரைத்து நெல்லிக்காய் அளவு பாலில் கலந்து 3 நாட்கள் பாலில் கொடுத்து வரின் மேகவெட்டை, மஞ்சட் காமாலை நீங்கும். உப்பு நீக்கி உண்ணவும்.

கரிசலாங்கண்ணி யாவருக்கும் தெரிந்த மூலிகை இது. வெள்ளைப் பூவோடு கூடியது. எங்கும் கிடைக்கும். மஞ்சட்பூவோடு கூடியது கிடைத்தால் நல்லது. தோட்டமிருந்தால் எளிதில பயிர் செய்யலாம். கறியாகச் செய்துண்ண அறிவும், தெளிவும், மேனி அழகும் உண்டாகும். இதன் இலைச்சாற்றை அரை அவுன்சு பாலில் கலக்கிக் குடிக்க பாண்டு, காமாலை நீங்கும். குழந்தைகளின் கல்லீரல் மண்ணீரலை வலிமை படுத்தி ஈரல் குலைக்கட்டி நோய் வராமல் தடுக்கும். கரிசாலை இலை வேரை நிழலில் உலர்த்திப் பொடி செய்து வைத்துக்கொண்டு 2 சிட்டிகை தேனில் குழைத்து கொடுத்து வந்தாலும் மேற்கூறிய நோய்கள் நீங்கும். காிசாலை பொன்னாங்கண்ணி,

சோற்றுக் கற்ருழை, கடுக்காய், மிளகு, அதிமதுரம் இவைகளை அரைத்துத் தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தலைமுழுகி வர கண் குளிரும். மயிர் கருத்து வளரும். மேனி அழகு பெறும். நல்ல நித்திரை உண்டாகும். சோற்றுக் கற்ருழையின் இள மடலுடன் சீரகம், கற்கண்டு சேர்த்து அரைத்துக் கொடுக்க சீதம், இரத்தக் கழிச்சல் நீங்கும், உடல் குளிரும். கற்ருழையும் கரிசாலையும் சேர்த்து கண்களுக்கு மை செய்து உபயோகப்படுத்தலாம்.

கழற்சி இலையால் குன்ம வலி நீங்கும். கழற்சிப் பருப்பை பொடித்து அதே அளவு மிளகும் சேர்த்து 5 குன்றி அளவு மோரில் கலக்கி மூன்று நாள் சாப்பிட்டால் குன்ம வலி, அண்டவாயு, அண்ட வீக்கம் நீங்கும்.

பிரண்டையை நெய் விட்டு வதக்கித் துவையல் செய்து உண்ணலாம். பிரண்டை வற்றலும் செய்து வைத்துக்கொள்ளலாம். இது நம் நாட்டு வழக்கம். இதனுல் நல்ல பசி உண்டாகும். மூல நோய் வராமல் தடுத்துக் கொள்ளலாம். இரத்தக் கழிச்சல் நீங்கும். உடல் வன்மை பெறும்.

அதிமதுரம் என்பது குன்றிவேர். இதனேடு மிளகு, கடுக்காய், திப்பிலி சேர்த்து வறுத்துப் பொடித்து தேனில் 1 சிட்டிகை குழைத்து உண்ண இருமல் நீங்கும். பசும் பாலில் காய்ச்சி சர்க்கரை நெய், தேன் சேர்த்து லேகியம் செய்தும் உண்ணலாம். கண் எரிச்சல் நீங்கிக் கண் ஒளி பெறும்.

உத்தாமணி என்ருலும் வேலிப்பருத்தி என்ருலும் ஒன்று தான். கொடி வகையைச் சேர்ந்தது. இதன் வேர், கொடி, இலை, எல்லாம் ஒரு பங்கு எடுத்து நான்கு பங்கு நீர் சேர்த்து 1 பங்காக வற்றவைத்துத் கொள்ளவும். குழந்தைகளுக்கு 1 சங்களவு புகட்டி வர வயிற்றுப் புழு வெளியாகும். இதனேடு வசம்புச் சுட்ட தூளும் சேர்த்துக் கொடுக்க குழந்தைகள் மாந்தம், கபம், கோழை நீங்கும். அவ்வாறே குப்பைமேனிச் சாற்றை சுடவைத்து ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி குழந்தைகளுக்கு கொடுக்க கபம் வெளிப்படும். குடற் கிருமியையும் வெளிப்படுத்தும். இதன் இலையையும் மஞ்சளை யும் சேர்த்து அரைத்து சொறி சிரங்குகளுக்குப் பூசித் தேய்த்துக் குளித்துவர நீங்கும்.

கோவைத் தண்டு, இலை, நாயுருவி, நீர்முள்ளி, நெருஞ்சில் சுரைக் கொடி, வெள்ளரி விதை, மிளகு, சோம்பு, கடுக்காய் முதலிய

வைசகளை எல்லாம் சம அளவு எடுத்து நான்கு பங்கு நீர் விட்டு ஒரு பங்கு வற்ற வைத்து காலை மாலை 1—2 அவுன்சு குடிக்க கை, கால் வீக்கம் நீங்கும். நீர் பிரியும். மேற் கூறிய மருந்துடன் வெள்ளைச் சாரணை இலை வேர் இவைகளையும் சேர்த்துக் குடிநீர் காய்ச்சிப் பருகி வர காமாலை, வீக்கம், குன்மம், வயிற்றுக்கோளாறு யாவும் நீங்கும்.

முடக்கற்ருன் வேலியில் படர்ந்து கிடக்கும். அதன் இலையை அரைத்து அரிசி மாவுடன் சேர்த்து அடை செய்தோ (அ) மிளகு ரசம் போல் செய்தோ சாப்பிடுவது நம் நாட்டு வழக்கமாகும். குலைப் பிடிப்பு, கீல் பிடிப்பு, கால் முடக்கு வாயு முதலியவை நீங்கும். அவ்வாறே புழுங்கலரிசியுடன் முசுமுசுக்கை இலையைச் சேர்த்து அரைத்து அடை சுட்டுக் கொடுத்துவர கோழைக்கட்டு, இருமல் ஈளை நீங்கும்.

இம்பூறல் தரையில் படரும் ஒருவகைப் பூண்டு. இதன் இலையின் பொடியை இரண்டு பங்கு அரிசி மாவுடன் கலந்து அடை செய்து இரைப்பு, இருமல் உள்ளவர்கள் சாப்பிடலாம். வடகம் செய்தும் உண்ணலாம். "இம்பூறலைக் காணுது இரத்தங் கக்கிச் செத்தேனே" என்று சட்டமுனி கூறுகின்ருர். ஆதலால் இதன் வேர் பட்டையில் செய்த லேகியம் — இரத்தம் கக்கச் செய்யும் நோய்க்கும் எலும்புருக்கி எனும் சயநோய்க்கும் நல்லது.

இதனுல் "உணவே மருந்து — மருந்தே உணவு" என்னும் கொள்கையைக் கடைபிடித்து நோய் வராமல் தடுத்து நல் வாழ்வு வாழ நம் முன்னோர்கள் வழி வகுத்தனர். அதிக காசு செலவின்றி மூலிகைகளைப் பயன்படுத்தி நல்வாழ்வு வாழலாம். வேறு எவ்வித தீங்கும் ஏற்பட இடமில்லை என்பதும் பல நூற்றுண்டுகளாக அனுபவத்தில் கண்ட உண்மை!

*

மலேயா & சிங்கப்பூரில்

"மூலிகை மணி"

பூரண விநியோக உரிமைபெற்ற விற்பனையாளர்,

M/s. Ismail Book Depot,

G. P. O. Box 149, SINGAPORE.

அறவுரை!

— திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

◎ மானுடராய்ப் பிறந்த நாம் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றினாலும் அறம் புரியவேண்டும். மனதாற் செய்யும் அறம் கடவுள் நினைவும் நற்சிந்தையுமாம்.

மொழியாற் புரியும் அறம் ஆண்டவன் திருநாமத்தையும் புகழையும் ஓதுதலும், பிறருக்குத் துன்பம் பயவாத மொழிகளைக் கூறுதலுமாம்.

உடலாற் புரியும் அறம் பதியை மலர் கொண்டு பரவுதலும், அடியார்க்குத் தொண்டு புரிதலும், பிற உயிர்களுக்கு நன்மை செய்வதுமாம்.

◎ கடவுள் சத்திய வடிவாக விளங்குகின்றார். விளையாட்டிற்கும் பொய் சொல்லுவதில்லை என்ற சத்தியநெறியில் நின்றவன், இமயமலையினும் சிறந்தவனாவான். அச் சத்தியவானைச் சண்டமாருதத்தாலும் அசைக்க முடியாது. அவனுக்கு மூன்று உலகமும் அடிமைப்படுகின்றன.

◎ பொறுமையோடு இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றார்கள் சிலர்; ஆனால் தம்மை யாராவது இகழ்கின்ற போதோ, புகைவண்டியில் இடந்தர மாட்டேன் என்று பிடிவாதஞ் செய்கின்ற போதோ தம்மையும் அறியாமல் சினம் வந்து விடுகின்றது.

◎ பொறுமை என்ற புகைவண்டியில் ஏறி, சத்தியம் அஹிம்சை என்ற இரு தண்டவாளங்களின் மீது, அந்தக் கடவுள் நம்பிக்கை என்ற எஞ்சினைப் பூட்டியோட்டினார். வழியில் எத்தனை எத்தனை காடுகள், மலைகள், நதிகள், பயங்கரமான கணவாய்கள் இத்தனையும்; கடந்தார். சுதந்தரம் என்ற பட்டினத்தை யடைந்தார். அடக்குமுறை, சிறைவாசம் முதலிய இடர்களை அவர் எவ்வளவு பொறுமையுடன் சகித்துக் கொண்டார் காந்தியடிகள்!

அரத்த மிகையழுத்தமா? அஞ்சற்க!

A WONDER CURE FOR BLOOD PRESSURE!



முருங்கை முன்னிற்க
அரத்த
மிகையழுத்தத்துக்கு
அஞ்சற்க!

முற்றிய முருங்கை இலைகளைப் பறித்துக் கழுவி, இடித்து, மெல்லிய துணியில் இடித்த இலைகளை யிட்டுச் சாறு பிழியவேண்டும்.

அரத்த மிகையழுத்த நோய் (Blood pressure —Lypertension) உள்ளவர்கள் ஒரு வேளைக்கு சுமார் 10 மல்லி லிட்டர் முருங்கை இலைச் சாற்றை காலை உணவுக்கு முன்பும், இரவு உணவுக்கு முன்பும் ஆக ஒரு நாளைக்கு இருவேளை பருகவேண்டும். மூன்று நாள் இவ்வாறு காலை மாலை பருக, அரத்த மிகையழுத்தம் குறைந்து இயல்பு நிலைக்கு வந்து விடும். ஒவ்வொரு முறையும் புதிதாக பறித்த இலைகளிலிருந்தே சாறு பிழிய வேண்டும். ஒரு முறை பிழிந்த சாற்றை அடுத்த வேளைக்குப் பயன்படுத்தக் கூடாது.

அரத்த மிகையழுத்தத்தால் மிகுந்த தொல்லை படுபவர்கள் நண்பகலிலும் ஒரு வேளை அஃதாவது 1 நாளைக்கு மூன்றுவேளை பருகலாம். மூன்று நாட்களிலேயே நோய் தீர்ந்து விடும். மூன்று நாட்கள் சாற்றைப் பருகிய பின்னும் மிகையழுத்தம் இருப்பதாகக் கண்டால், மேலும் மூன்று நாட்களுக்கு இவ்வாறே பருக வேண்டியது. இவ்வாறு ஆறு நாட்கள் பருகிய பின் மிகையழுத்தம் எவருக்குமே இருந்ததில்லை. குணம் காட்டத் தொடங்கியவுடனே சாற்றை பருகுவதை நிறுத்திவிட வேண்டும்.

மிகையழுத்த நோயாளிகள் காப்பியைத் தவிர்ப்பது நல்லது சாற்றைப் பருகுங் காலத்தில் காப்பி குடிக்கலாகாது.

மூலம் : Sunday Standard 7-3-71

குறிப்பு :— குருதியைக் குறிக்கும் பிரிதொரு செந்தமிழ்ச் சொல் "அரத்தம்".

— விடுநர் சு. திருஞானம்

21-2, காசாமலைக் குடியிருப்பு, திருச்சிராப்பள்ளி.

உ

முருகா.

சித்தர்கள் பற்றிய ஆய்வுத் தொடர் கட்டுரை:

நம் நாட்டுச் சித்தர்கள்!

[இரா. மாணிக்கவாசகன், எம். ஏ. எம். லிட்.]

— முன் மாதத் தொடர்ச்சி

புகழ் பெற்ற ஆதிமந்தி ஆட்டனத்தி கதையைப் பரணர் ஒருவரே நான்கு பாடல்களில் குறிக்கின்றார்.

(அகம் 1524, 1529, 1541, 1543)

மிக விரிவாகப் பரணர் கூறும் இக் கதைக் குறிப்பை வெள்ளி வீதியார் இரண்டு அடிகளில் குறித்துள்ளார். (அகம் 2252)

நன்னனைப் பற்றி இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் (மலைபடுகடாம் 467) கலலாடனார் (அகம் 1009) காப்பியாற்றுக் காப்பியனார் (பதிற்றுப்பத்து - 4 ஆம் பத்து பதிகம்) குடவாயிற்சீரத்தனார் (அகம் 44) பெருங்குன்றூர் கிழார் (பதிற்றுப் பத்து - 9 ஆம் பத்து 8 வரி 10) மாங்குடி மருதனார் (மதுரைக் காஞ்சி 618) மாமூலன் (அகம் 15 பாலை) (349 பாலை) முள்ளியூர்ப் பூதியார் (அகம் 173 பாலை) மோசிகீரனார் (அகம் 392 குறிஞ்சி) எனப் பல புலவர்கள் பலவாறு பாராட்டிப் பாடியிருக்க அவன் பெண்கொலை புரிந்த நிகழ்ச்சியினைப் பரணர் ஒருவரே (குறுந்தொகை 292 குறிஞ்சி) குறித்துள்ளார்.

இங்ஙனம் பல மேற்கோளைக் காட்டுதல் கூடும். எனவே மதுரைக்காஞ்சியின் வரிகளுக்கு இராவணனையும், அகத்தியனையும் கொண்டு வந்து அதனோடு கதைகளையும் புகுத்திக் கூறுவது வலிந்து வேண்டுமென்றே கூறும் பொருள்கோளாகும் எனலாம். மேலும் 'பின்னர் மேய' என்பதற்கு வழிவந்த என்பதைக் காட்டிலும் சீர் சிறப்பு முதலியனவற்றில் அவனுக்கு அடுத்துத் தோன்றிய எனப் பொருள் கொள்வது ஏற்புடையதாக அமையும், இன்றைய உலக வழக்கிலும் இவ் வழக்கினைக் காணுகின்றோம்.

இனித் தென்னவன் என்னும் சொல் சங்க இலக்கியங்களில் எந்த இடத்திலும் இராவணனை குறித்து வரவில்லை என்பது குறிக்கக் தக்கது. சுமார் 726 சங்கப் புலவர்களில் யாரேனும் ஓரிருவரேனும் குறித்திருக்கலாம். எனவே அவ்வாறு குறிக்காமையால் அச்சொற்கு அப் பொருள் கொள்ளுதல் சற்றும் ஏலாது.

திருந்திலை நெடுவேற் றென்னவன் பொதியில்
— அகம் 138 குறிஞ்சி

திண்தேர்த் தென்னவ னன்னாட் டுள்ளதை
— ஐங்குறு 54

வடவர் வாடக் குடவர் கூம்பத்
தென்னவன் திறல்கெடச் சீறி மன்னர்
மன்னெயில் கதுவு மதனுடை நோன்றாள்
— பட்டின 276-78

பூந்தண்டார்ப் புலர்சாந்திற் றென்னவ னுயர்கூடல்
கலி 57 குறிஞ்சி

பன்மலை யிறந்தவன் பணிந்துவந் தடிசேர
தென்னவற் றெளிந்த தேஎம்போல — கலி 26 நெய்தல்

தென்னவன் வையைச் சிறப்பு — பரிபாடல் 20 வையை

மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
— கலி 104 முல்லை, வரி 1-4

தொல்கதிர்த் திகிரியாற் பரவுதும் ஒல்கா
உருமுறழ் முரசிற் றென்னவன்
— கலி 104 முல்லை, வரி 78-79

மணிகிளர் முன்றிற் றென்னவன் மருகன் — புறம் 388
பொய்யாவாட்டானைப் புனைகழற்காற் றென்னவன்
— கலி 98 மருதம் 38
— உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்
— பரிபாடல் (திரட்டு) 6-மதுரை

மேற்காட்டிய மேற்கோள்களை ஆராயின் தென்னவன் எனும் சொல் பாண்டியனையே பண்டைய இலக்கியங்களில் குறிக்கப்பட்டது என்பது விளங்கும். பின்னர் வந்த நூல்களில் தான் இச் சொல் இராவணனையும் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டது.

தென்னவன் மலையெடுக்கச் சேயிழை நடுங்கக்கண்டு
— நாவுக் - திருக்கச்சிமேற்றளி : 10

எனவே 'தென்னவற் பெயரிய' என்னும் சொற்கு இராவணனைத் துரத்திய என எவ்வகையிலும் பொருள் கொள்வது ஆகாது. மேலும் கடவுள் என்றோ முதுகடவுள் என்றோ தொன்முது கடவுள் என்றோ எவ்விடத்திலும் அகத்தியர் குறிக்கப்பட வில்லை என்பதும் கவனிக்கத் தக்கது. 'கடவுளொருமீன் சாலினியொழிய' (பரிபாடல் வரி 44-திருமால்) எனக் குறிக்கப்படும் கடவுள் மீன் அருந்ததியாகும் எனவே அச் சொற்கும் அப் பொருள் ஒவ்வாது என்பது தெளிவு. ஆதலின் மதுரைக்காஞ்சியின் வரிகளில் அகத்தியர் குறிப்பு இல்லை என்பது தெளிவு.

அவ் வரிகளுக்கு முன்கண்டது போல் தென்னாடுடைய சிவன் என்னும் கருத்தொடு வேறு ஒன்றும் கூறுதல் கூடும்.

'சோழனும் சேரனும் இருப்பினும் அவர் தம் வலிமையையும் புகழையும், தன் வலிமையாலும் புகழாலும் அடக்கித் தென்னாட்டின் தலைவன் எனும் பெயர் தாங்கி, (தென்னவன் பெயரிய) துன்னமுடியா துப்பினையுடைய தொன்முது கடவுளின் பின்வந்தவனாகிய அருவி தாழ்ந்தோடும் பொதியமலை உடையானே' என்பது அது. தொன்முது என்பது மீமிசை என்பது போல ஒரு பொருட் பன்மொழியாக பழமையைச் சிறப்பிக்க வந்தது. மணிவாசகரும் 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே' (9 திருவெம்பாவை) எனக் கூறுதல் காண்க.

மதுரைக்காஞ்சியில் அகத்தியர் குறிப்பு இல்லை எனினும் பாண்டியர்க்கும் அகத்தியருக்கும் ஒருதொடர்பு இருந்தது என்பதற்கு சில சான்றுகள் காணக் கிடைக்கின்றன.

'அகத்தியர் பாண்டியர் குலகுருவாக இருந்தார். இச் சேதி கி பி 10 ஆம் நூற்றாண்டில் மூன்றாம் இராசசிம்ம பாண்டியன் ஆட்சிக் காலத்தில் வரையப் பெற்ற சின்னமனூர்ச் செப்பேடுகளில் வடமொழி பகுதியில் 'அகஸ்த்ய சிஷ்ய' என்றும், தமிழ்ப் பகுதியில் 'பொருவருஞ்சீர் அகத்தியனைப் புரோகிதனாகப் பெற்றது' என்றும் குறிக்கப் பட்டுள்ளவற்றால் நன்கு வெளியாகியது.

(பக். 40 இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுகளும்
T. V. சதாசிவ பண்டாரத்தார்
தொல்காப்பியர் நூலகம், சென்னை 1961)

இறையனார் அகப்பொருளுரையில் மேற்கோளாகக் காட்டப் பெற்ற பாண்டிக்கோவைப் பாடல் ஒன்று. உசிதன் என்ற பாண்டிய

வேந்தன் ஒருவன் அகத்தியன் பால் தமிழிலக்கணம் கேட்டனன் என்று உணர்த்துகின்றது. இதனை

'பண் டகத்தியன்வாய்
உரைதரு தீந்தமிழ் கேட்டோ னுசிதன்'

என்னும் பாட்டிற்பகுதியால் அறியலாம்.

இனி வீரபாண்டியன் கல்வெட்டொன்று பாண்டிய மன்னன் ஒருவன், 'திடவாசகக் குறுமுனிபாற் செந்தமிழ்நூல் தெரிந்தருளி னான்' என்று கூறுவதும் குறிப்பிடத் தக்கது.

அன்றியும் காளிதாசரும் தம் ரகுவம்சத்தில் பாண்டியன் அகத்தியனது சிஷ்யன் எனக் குறித்துள்ளார். (பக். 41 அதேநூல்)

இதே செய்திகளை ரா. ராகவையங்காரும் தம் தமிழ் வரலாறு என்னும் நூலில் (பக் 206 அண்ணுமலைப் பல்கலைக் கழக வெளியீடு-1952) குறிக்கின்றார்.

இங்ஙனம் பாண்டியர்க்கும் அகத்தியர்க்கும் கற்பிக்கப்பட்ட தொடர்பு மிகப் பிற்பட்டது என்பதும் கவனிக்கத் தக்கது ஆகும்.

இனி சங்க காலத்தை அடுத்துத் தோன்றிய இரட்டைக் காப்பியம் எனக் குறிக்கப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை - யில் காணலாகும் குறிப்பினை ஆராய்வோம்.

சிலப்பதிகாரத்தில் சில குறிப்புகளே காணப்படுகின்றன. அவற்றிலும் தெளிவாக அகத்தியன் என்ற குறிப்பு காணப்படவில்லை என்பது குறிக்கத் தக்கது.

மங்கல வாழ்த்துப் பாடலில் பொதியில் குறிக்கப்படுகிறது.
'பொதியி லாயினும இமய மாயினும்'

(மங்கல 14 சிலம்பு ந மு. வே. நாட்டார், கழகம் 1942)

(இமயத்தோடும் பொதியிலோடுமுள்ள இருடிகளையும் (புகாரிலுள்ள) வணிகரையும் உவமித்தவாறும்—பக் 25)

நற்கா மரபிற் பொதியி லன்றியும் — (காட்சி 117)
பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு ... 122
குடமலை யாங்காட் டுள்வேன் — (காடு காண் 53)
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை ... 42
ஓங்குயர் மலையத் துயர்ந்தோற் றெழுது ... 105

இங்ஙனம் பொதியமலை பற்றிவரும் குறிப்புக்களில் எவ்விதக் குறிப்பும் அகத்தியர் பற்றி வராமை நோக்குக.

இனி வரும் அடிகள் பெரிதும் கூர்ந்து நோக்கத் தக்கவை.

தெய்வ மால்வரைத் திருமுனி யருள
எய்திய சாபத்து இந்திரச் சிறுவனொடு
தலைக்கோல் தானத்துச் சாபம் நீங்கிய
மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை
(அரங்கேற்று 1-6)

'தெய்வத் தன்மையுடைய பெரிய மலையாகிய பொதியிலின்கண் உள்ள அகத்திய முனிவன் அருள் செய்தலால் முன்பு அவனால் எய்திய சாபத்தை யுடைய இந்திரகுமாரனாகிய சயந்தனோடும் நாடக அரங்கின் கண்ணே சாபம் நீங்கப்பெற்ற மாறுபடுதல் அரிய சிறப் பினையுடைய அரம்பையரில் வரிசையிற் குன்றாத நாடகத் தொழி லொடு பொருந்திய உருப்பசியாகிய அம்மாதவி மரபில் வந்த பிறப்பில் குன்றாத பெருந்தோள் உடைய மாதவி' (பக் 49) என்பது மேற்காட்டிய வரிகளின் பொருளாகப் படுகின்றது.

இங்கு திருமுனி என்பதற்கு அகத்திய முனி என்று பொருள் கொள்ளப்படுகின்றது. முனிவருள் சிறந்தோனாகிய அகத்தியன் வாழ்ந்ததாலே தெய்வமால்வரை என்றார் என விளக்குவார்.

மேற்காட்டிய வரிகளோடு தொடர்புடையதாக கடலாடு காதை யின் வரிகளை இணைத்துக் காட்டுவார்.

நாரதன் வீணை நயந்தெரி பாடலும்
தோரிய மடந்தை வாரம் பாடலும்
ஆயிரங் கண்ணோன் செவியகம் நிறைய
நாடகம் உருப்பசி நல்காளாகி
மங்கலம் இழப்ப வீணை மண்மிசைத்
தங்குக இவளெனச் சாபம் பெற்ற
மங்கை மாதவி வழிமுதல் தோன்றிய
அங்கரவு அல்குல் ஆடலும் காண்குதும் (கடலாடு 18-25)

நாரதனாகிய முனிவன் இசையின்பம் விளங்கப்பாடும் பாடலும் தோரியமடந்தை பாடும் வாரப்பாடலும், இந்திரனுடைய செவியிடம் நிறையும்படி உருப்பசி நாடகம் நடித்திலள். ஆதலால் வீணை மங்க லம் இழப்ப மண்மிசை தங்குக எனச்சபித்தலின் அதனைப் பெற்று வந்து பிறந்த மங்கையாகிய மாதவியின் வழியில் பிறந்த அரவு போலும் அல்குலையுடைய மாதவியின் ஆடலும் அவ்விடத்துக் காண் போம் (பக். 139) என்பது மேற்காட்டிய வரிகளின் பொருள்.

(தொடரும்)

எமது தயாரிப்புகள்:

கற்பக மிளகுப் பொடி

குழந்தைகளுக்கு வரும் எவ்விதமான நோய்களுக்கும் குறிப்பாக மாந்தை, இழுப்பு, இளைப்பு, இருமல், கபக்காய்ச்சல்களுக்கு ஏற்றது.

ஒரு பாக்கெட் விலை ரூ. 3—00

முக்கூட்டு கற்ப மூலிகைத் தைலம்

எண்ணெய் ஸ்நானத்திற்கு ஏற்றது. தேக வலிமையும் உண்டாக்கி உடல் சூட்டைத் தணித்து ஆரோக்கியத்தைத் தரும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

மருதோன்றித் தைலம்

தலைமுடி கொட்டுபவர்களுக்கு ஏற்றது. தலைமுடி கொட்டுவதை நிறுத்துவதுடன் கருமையாக தலைமுடியை வளர வைக்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

மூலிகை பேதி மாத்திரை

மலச்சிக்கல், மலப்புழு உள்ளவர்கள் மாதம் 1 முறை சாப்பிடலாம் குழந்தை முதல் பெரியோர் வரை பயமின்றிச் சாப்பிடலாம்.

25 மாத்திரை விலை ரூ. 2—50

வல்லாரைத் தைலம்

மண்டை வறட்சி, ஞாபகமறதி, வழுக்கைத்தலை, அதிகஉஷ்ணம், பித்தம் ஆகியவை நீங்கி தேகம் குளிர்ச்சியாகும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

முசுமுசுக்கை தைலம்

தலைக்கு தடவிவர சகல உஷ்ணமும் நீங்கும். பீனிச நோய், அகாலரோமம் உதிர்தல், ஆஸ்துமா, காசநோயுடையவர்களுக்கு ஏற்றது

ஒரு புட்டி விலை ரூ. 4—00

கருவேலன்பட்டை பற்பொடி

தினசரி உபயோகத்திற்காகவும் பல்லுறுதிக்கும், பல்தூய்மைக்கும் சிறந்தது கருவேலன்பட்டை பற்பொடி.

ஒரு பாக்கெட் விலை 0—30 காசு.

காது நோய் எண்ணை

காதில் சீழ்வடிதல், இரத்தம் வருதல், காதுவலி, வீக்கம் ஆகியவைகளுக்கு சிறந்த மூலிகைகளால் தயாரித்தது.

ஒரு புட்டி விலை ரூ. 2—00

வல்லாரைத் திப்பிலி

பள்ளி செல்லும் இளம் மாணவ மாணவியர்களின் ஞாபக மறதி நீங்கி, கவனமாய்ப் படித்து தேர்வு எழுதி முதன்மையாக தேறலாம்.

40-நாள் மருந்து பாக்கெட் விலை ரூ. 3-50

நேத்திரப் பூண்டு தைலம்

96-வித கண் கோளாறுகளுக்கும் (பார்வை மங்கல், சதை வளர்தல், சாளேச்ரம்) சிறுவர் முதல் பெரியோர் வரை உபயோகிக்கலாம்.

ஒரு புட்டி விலை ரூ. 7-50

மகா மூலிகை எண்ணெய்

காலில் ஆணி, தோலைப் பற்றிய நோய்கள், வெண்குட்டம், உடலில் அசுத்த நீர் தேக்கம், ஊளைச்சதை, சர்மநோய்கள் தீரும்.

ஒரு புட்டி விலை ரூ. 25-00

தலைவலி மாத்திரை

எந்தவிதமான தலைவலி வந்தபோதிலும் ஒரு மாத்திரையை சுடு நீரில் உரைத்து தலைக்குப் பற்று போட்டுவிட வலியெல்லாம் குறைந்து நீர்குற்றம் முதல் எல்லா வலிகளையும் அறவே போக்கும். சித்தர் இலகு மருத்துவத்தில் இம்முறை கூறப்பட்டுள்ளது.

25 மாத்திரை விலை ரூ. 2-50

பொன்னுங்கண்ணி தைலம்

அசல் பொன்னுங்கண்ணி கீரையால் முறைப்படி தயாரித்தது. கண் ஒளிக்கும் பார்வைக்கும் சிறந்தது. தலைக்கு ஸ்னுமாகவும், தினம் தடவிக்கொள்ளவும் ஏற்றது.

1 புட்டி விலை ரூ. 4-00

தாளிச கலவைப் பொடி

பழங்கால முறைப்படி தயாரித்தது. சாதாரண காய்ச்சல் முதல் எந்தவிதமான நோய்களுக்கும், குழந்தை முதல் பெரியோர் வரையில் தேன், நெய், வெண்ணெ, வெந்நீர் போன்ற அனுபானங்களில் கலந்து பயன்படுத்தலாம். 1 பாக்கெட் விலை ரூ. 8-00

தேவையான மருந்தைக் குறிப்பிட்டு இத்துடன் தபால் சிலவு ரூ. 2—05 சேர்த்து கீழ்கண்ட முகவரிக்கு மணியாடர் செய்தால் உடன் பார்சல் மூலம் வரிசைக் கிரமமாக அனுப்பி வைக்கப்படும்.

மருந்துகள் ஒன்றுக்கு மேல் 2 (அ) 3 புட்டிகளுக்கு ரூ. 3-05ம் 4 (அ) 5 புட்டிகளுக்கு ரூ. 4-05ம் தபால்சிலவு சேர்த்து அனுப்பவும்.

மணியார்டர் கூப்பனில் தெளிவான விலாசமும், தேவையான மருந்துகளும் விபரமாக எழுதாவிடில் சரிவர கவனிக்க இயலாது.

முகவரி :— **ஆ. இரா. கண்ணப்பர், R. M. P.**

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1. (வ. ஆ.)

மருந்தினது பக்குவ குணம்!

[திரு. வி. பலராமையா, B. A. B. L. சென்னை]

மருத்துவ நூல்களில் குறிப்பிட்ட முறைகளை செவ்வனே அனுசரித்து கைபாகம்; செய்பாகம் பிறழாமல் அரைப்பு, உலர்த்தல், புடம் முதலியவைகளை செய்து முடிக்கும் மருந்துகளே தூய்மையானது. ஆறு சாமங்கள் கைவிடாமல் அரைத்தல் வேண்டும் என்று நூல்கள் சொன்ன போதிலும், போதும் என்று இரண்டாவது சாமத்திலேயே நிறுத்திவிட்டு மாத்திரை உருட்டுகிற மருத்துவர்கள் மருத்துவத்துக்கே துரோகம் செய்தவராவார்கள்.

உலோகங்கள் அரைத்த வில்லைகள் குறைந்த பட்சம் பத்து நாட்களாவது உலரவேண்டும். புடமிட்டு எடுக்கும்போது சாத்திரங்களில் சொன்னபடி வர்ணம் குறையுமானால் அதை மறுபடியும் அந்த வர்ணம் வரும் வரையில் புடங்களிடுதல் வேண்டும்.

"பக்குவ பாகத்தையுறு மருந்தும் பிறழ்
பக்குவமாகத் துப்பருமருந்து — மெய்க்குங்கா
லக்காலமும் பணருவாழி வருந்துன் சிந்துசேடன்
கக்கால்மும் பேருந்துங் காண்" — (தேரையர்)

தகுமான முறையினாற் செய்யப்பட்ட மருந்துகளே யானாலும் பக்குவ பாகத்தைப் பொருந்துமானால் அது தேவர்கள் உண்ணத் திருப்பாற்கடலில் உண்டான அமிர்தத்துக்கு ஒப்பாம். கனமான முறையினாற் செய்யப்பட்ட மருந்துகளே யானாலும் செய்பாகங் கெடுமாயின் அக்காலத்தில் ஆதிசேடன் கக்கிய நஞ்சுக்கு ஒப்பாகுமென்க.

மறுபாகக் குணம்

பக்குவமாய்க் காய்ச்சி ஆறின வெந்நீர் ரசாயனம், நல்ல வீரியமுள்ள லேகியம், கியாழம் தனியே இடித்துப் பிழிந்து

முறித்த சுரசம் சென்ற இரவில் மீந்த பதார்த்தம் முதலியவை களை மறுபடியும் ஒரு தரம் அடுப்பில் வைத்துப் பாகஞ்செய்து புசிக்கில் இதுவே நஞ்சாம்.

மருந்து வைக்கும் பாத்திரத்தின் குணம்

தெங்கின் குடுக்கை ;

மூங்கிற் பரணை ;

தந்தச் சிமிழ் — இவைகளில் வைக்கின்ற நலமில்லாத அற்ப மருந்தும் உயர்ந்த மருந்தாம். வெண்கலம், இரும்பு, மரம், மிருகங்களின் கொம்பு இவைகளாற் செய்த பாத்திரங் களில் வைப்பது மத்திம பட்சமாம்.

மருந்தூட்டும் பாத்திர பேதம்

வாதரோகிகளுக்கு — வெண்கலப் பாத்திரத்திலும்
பித்த ரோகிகளுக்கு — தங்கப் பாத்திரத்திலும்
சிலேஷ்ம ரோகிகளுக்கு— தாம்பரப் பாத்திரத்திலும்

மருந்தை இழைத்துண்ணக் கொடுக்க வேண்டும். இவைகள் இல்லையெனில் மண் பாததிரமே உத்தமமாகும். இது பூரண ஆயுளைத் தரும்.

மருந்தருந்திய பின்பு வாயிலிடும் பொருட்கள்

கொட்டைப் பாக்குச் சீவல்
நாகப்பூ
தேன்
திராட்சைப் பழம்
வெற்றிலைக் காம்பு
கிராம்பு
பழைய நெற்பொரி
பச்சை கற்பூரத்தூள்

இவைகள் உண்ட மருந்தின் தன்மையை கெடுக்காத பொருட்கள்.

Therapeutic uses of Kalpa Drugs!

— continuation from May

It may as well be asked how Siddhar Kalpa drugs of mineral compounds containing chiefly gold, mercury, sulphur, salts etc could fight against degenerative diseases. The scientists may have even great doubts as to their therapeutic uses in this regard. But the pharmacological properties of these metals have already been well investigated. Therefore a comparative study of therapeutic uses of these drugs will be of great interest to modern investigators.

MERCURY

Colomel has been in use as a diuretic from the time of Paracelsus (16th century). Mercurial compounds are highly effective as bacteriostatic agents as well as antisyphilitics. In spite of its efficacy as well as its pharmacological and toxicological importance, its use in modern days has been displaced slowly by some other drugs, because of its cathartic action and uncertainty of absorption.

But its cathartic effect in suitable combination with other drugs renders it beneficial as in Siddhar Kalpa treatment by eliminating 'the ashes of the metabolic fires' from the body. Moreover, small doses of calcined oxides prepared according to Siddha methods ensures certainty of effect and absorption in the system as nervine tonic stimulant and alterative increasing the number of blood corpuscles and acting on the tissues and endocrine organs. As an effective bacterial agent, it expels all poisonous by-products accumulated in the arteries and serves as intestinal anticeptic.

Paracelsus' views on mercury will be of great interest in this regard. He says:

" The Elixir of mercury, prepared in the same was as that in which it is used for transmuting metals, avails in the very highest degree for driving away disease. As metals are transmuted and fully fixed, so also is the body in the following manner:—Reduce

mercurry in elevation until it assumes the form of a crystal, then digest it to the point of resolution and coagulation ; join it with gold so that this shall produce its ferment. Then proceed according to the prescript of Hermes, and continue to the completion of the stone. The dose thereof is one grain. Its power and virtue preserve the whole body in its entirety."

SULPHUR

Calcined sulphur or red oxide of sulphur can only be obtained by consolidating it first by Siddhic methods of purification. It is also prepared by the process of sublimation. According to Siddhar's science it is an alchemical process and that it may not readily escape as fumes in fire. It is therapeutically used both as an internal and external remedy against scabies and other skin diseases, rheumatic arthrities, spasmodic asthma, jaundice and blood poisoning etc., In short, alterative, diaphoretic as it is, will conserve the body in small doses.

For conservation of health, Paracelsus recommends the use of purified sulphur, as medicament according to alchemical process. It is as follows :

" It is specially difficult, yet worthy of all celebrity to realise the power and nature of the earth which procreates balsam, the characteristic whereof is that it suffers nothing to putrefy. But think of the resins whereof the principal ingredient is sulphur and there is nothing which deserves greater praise. In sulphur there is a balsam which none who study the different arts should fail to remember. In it are the balsamic liquids which do not allow wine or any thing dead to putrefy, but do so conserve the body that there can attach to it no evil influence natural corruption or any impressed on it from without."

According to modern pharmacology, because of its soluble character, sulphur is mainly employed in ointment bases for external use in skin diseases on account of its disinfectant action and internally as a laxative for softening the stools.

GOLD

Only in recent times, gold salts have been used against tubercle infections. Its use has now been extended to Rheumatoid arthritis. Because of its distribution in the body and its short life, Colloidal radio active gold, has been used in the treatment of Cancer (Phamacology in Medicine by Drill). Moreover, its use has been proved effective in epilepsy, alcholic neurasthenia and in the morphine habit (Stanford 1924). A number of clinical studies on the usefulness of gold shows that very little gold is absorbed and it is excreted mainly by the kidney etc. Generally oral administration of gold compounds is not preferred. But, Siddhar kalpa containing gold compounds is regarded as a sovereign remedy in heart diseases, also a wonderful alterative, nervine tonic, antidote to poison, and a powerful sexual stimulant. It has also been recommended as a general tonic in anemia, debility and in the treatment of T. B. Paracelsus, in his treatise on longevity says that of all the elixirs, the highest and most potent is gold.

Care is taken to see that calcination of gold is free from metallic state and lustre to ensure safe absorption in the system.

ARSENIC

In the " Pharmacological Basis of Therapeutics " it has been referred that the two diseases which may respond favourably to medication with inorganic arsenic are leukemias and psoriasis and also asthma. As Leukemias is a cancer of the blood, no surgery is required but can be cured only by a chemical agent like arsenic.

In Siddhar Kalpa, a purified and consolidated arsenic is being included. It is also effective against all fevers, asthma and anemias.

— (to be continued)

— from the book : SIDDHAR'S SCIENCE OF LONGEVITY AND KALPA MEDICINE

COPIES CAN BE HAD FROM :—

MR. S. SIVABALAN

No. 8, Umayal St., Alagappa Nagar, MADRAS-10

உ
முருகா.

மூலிகை அகராதி

— முன் மாதத் தொடர்ச்சி

காப்பிக் கொட்டை

வேறு பெயர்கள் : காப்பிக்கொட்டை, ஆங்கிலம் : காபிசீட் கேபியா அராபிகா, தெலுங்கு : காப்பி வித்துலு, மலையாளம் : காப்பிக்குரு, கன்னடம் : காப்பி பீஜா, சமஸ்கிருதம் : மிரீசபாலா உருது : பன், இந்தி : பன்.

விபரம்

காப்பிக்கொட்டைச் செடி நீலகிரி மற்றும் மலைப்பிரதேசங்களில் பயிராகிறது. நமது நாட்டிலும் இன்றி இது உலகத்தின் பல பாகங்களிலும் பயிராகிறது. இன்று தொண்ணூறு சதவீதம் காப்பிக்கொட்டையை குடிநீராகப் பயன்படுத்துவோர் ஆகியுள்ளனர் என்றால் மிகையல்ல!

உபயோக உறுப்பு

உலர்ந்தக் கொட்டை.

சுவை : கைப்பு, துவர்ப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு

குணதிசயங்கள்

வெப்பமுண்டாக்கி, சிறுநீர் பெருக்கி, கற்றுகளாக்கி, தூக்கமகற்றி, பித்தநீர் பெருக்கி, உற்சாகம் எழுப்பி, செரிப்பு உண்டாக்கி, வீக்கம் கரைச்சி.

காய் வள்ளிக் கொடி

வேறு பெயர்கள் : வெற்றிலை வள்ளி, வத்தலை வள்ளிக்கிழங்கு ஆங்கிலம் : டயாஸ்கொரியா, புல்பி பெர்ரா, தெலுங்கு : செடுபட்டு துப்பா, மலக்கா காயபென்டலம், மலையாளம் : கச்சாக்கொடி, கன்னடம் : தூன ஜெனசு, இந்தி, சமஸ்கிருதம் : ஜமிம் காண்.

விபரம்

வெற்றிலையைப் போலக் கொடியேறும் கிழங்கு வகையைச் சேர்ந்தது. பயிரிட்டு வரும் கொடி இனத்திற்கு நாட்டு வெத்திலை வள்ளிக்கிழங்கு என்றும், தன்னிச்சையாக காடுகளில் வளரும் இனத்திற்கு காட்டு வெத்திலை வள்ளிக்கிழங்கு என்றும் கூறுவர். இதன் காயையும்; கிழங்கையும் சாப்பாட்டில் காய் கறியாக உபயோகப்படுத்துவதும் உண்டு.

உபயோக உறுப்புகள்

கொடி, காய், கிழங்கு.

சுவை : இனிப்பு, கைப்பு, வீர்யம் : வெப்பம், சீதம், பிரிவு : கார்ப்பு இனிப்பு.

குணநிசயம்

துவர்ப்பி, வெப்படக்கி, வாதமடக்கி, புண்ணுற்றி, மலமிளக்கி, சிறுநீர் பெருக்கி, வியர்வை பெருக்கி. (தொடரும்)

மூலிகை மணி சந்தா விபரம்

தனி இதழ் ரூ. 0—50 மூவாண்டு சந்தா ரூ. 18—00
ஆண்டு சந்தா 6—00 ஆயுள் சந்தா 150—00

மூவாண்டு சந்தா ஒரே முறையில் செலுத்துபவர்களுக்கு எமது வெளியீடுகளில் ஏதேனுமொன்று இலவசமாக தரப்படும் ஆயுள் சந்தா செலுத்தினுல், எமது வெளியீடுகள் அனைத்தும் அன்பளிப்பாக தரப்படும்.

தலை முதல் கால் வரை!

— முன் மாதத் தொடர்ச்சி

பற்களைப் பற்றிய விஷயங்களைத் தெரிந்து கொண்டது போலவே வாய், உதடு, நாக்கு பற்றியவைகளையும் அறிய முற்படுவோம்.

நமது எண்ணங்களை நமது முகபாவனைகள் பிரதிபலிக்கின்றன அல்லவா? மனம் களிப்பாக இருந்தால் முகம் மலர்ந்து ஆனந்தமாக இருக்கும். மனம் வேதனையாக இருந்தால் முகம் மிகவும் சுருங்கி அதன் கவலை சாயல் முகத்தில் காணலாம். எனவே கண் காண முடியாத உணர்ச்சி வசமாகும் எண்ணங்களை பிரதிபலிக்கச் செய்வது முகம். இது போலவே வயிறு, குடல், ஈரல், இதயம், சிறுநீரகம் ஆகிய அரச உறுப்புக்கள் பழுதடையுமானால் வாய், உதடு, நாக்கு, முதலிய வாய் உறுப்புக்கள் பாதித்து — அதன் நோய்க் குறிப்புக்களை இந்த அவயவங்களின் மேல் பிரதிபலிக்கின்றன. இவைகளின் மேல் வரும் இரணங்கள், புண்கள் எல்லாம் உள்ளுறுப்புகளில் உண்டான கெடுதலைக் காட்டத்தான் இறைவன் இப்படி குறிகுணங்களை உண்டாக்கியுள்ளான்.

இறைவன் படைப்பில் இப்படி ஓரறிவுயிர் தாவரம் முதல் ஆரறிவுயிரான பகுத்தறிவு படைத்த மானிடர் வரையில் குறி, குணங்கள் இல்லாத பொருள்களே இல்லை! ஆமாம். இதனை ஆரறிவு படைத்த இனம் ஒன்று தான் அறிந்து கொள்ள முடியவில்லை. மற்றவை எல்லாம் இயற்கையாகவே மலர்ந்து பூத்துக் காய்த்துப் பழுத்து முடிவில் இயற்கையில் ஒன்றிவிடுகிறது.

மனிதனுக்கு இறைவன் குறிகுணங்களால் நோய் வருவதை உணர்த்துகிறான்! முதலில் தலை ரோமங்களை நரைக்க (வெளுக்க) வைக்கிறான். பகுத்தறிவு படைத்த மனிதன், அதனை மறைக்க கருப்பு சாயம் போட்டு மீண்டும் இளமையாகவே இருக்க முயற்சிக்கிறான்.

கண் பார்வை இழந்தால் கண்ணாடி அணிகிறான். அடுத்து பற்கள் ஆட்டம் கொள்ள ; அதையும் விஞ்ஞான முறைப்படி பிடுங்கிவிட்டு (செயற்கை) பொய்ப் பற்களைக் கட்டிக்கொண்டு விடுகிறான். இப்படியே நவீன விஞ்ஞான முறைகளைக் கையாண்டு அறுவை சிகிச்சை, செயற்கை விஞ்ஞானக் கருவிகளில் மனிதன் எத்தனை நாளைக்குத் தான் இறைவன் விடும் எச்சரிக்கையைத் (நோட்டீஸ்) தட்டிக் கழித்து வாழமுடியும் ?

இறுதியில் நரம்புத் தளர்ச்சியாகி கை, கால், கழுத்து நரம்புகள் நடுக்கம் கொள்ளும்போது என்ன செய்யமுடியும்? எனவே இயற்கையாகவே நம் உடலுக்கு வரும் எச்சரிக்கை குறிகுணங்களைக் கண்டு அதற்கு ஏற்றபடி இயற்கையாகவே நமக்கு கிடைக்கும் எளிய மூலிகை வகைகளைப் பயன்படுத்தி நமது உடல் நலன்களுக்கு பாதுகாப்பு அளிப்பது தான் நமது சித்தர்கள் கண்ட சீரிய முறைகள் ஆகும்.

வாய் உதடுகள்

வாய் புறத்தின் உதடுகளில் வெடிப்பு உண்டாவதும் அதிலிருந்து ரத்தம் நீர் கசிவதும் வயிற்றில் உள்ள இரைப்பையின் கோளாறுகளை குறிக்கும். இந்த வாய் உதடுகளில் உள்ள ரணத்தை ஆற்ற இரைப்பையில் உள்ள அழற்சி ரணத்தை ஆற்ற வேண்டும்.

ஆரம்ப நோயில் இதற்கு பொடுதலைக்கீரை மணித்தக்காளிக் கீரை, வாழைப்பூ போன்றவைகளை உணவுடன் சேர்த்து நாள் தவறாமல் உண்டுவர இரைப்பையின் அழற்சிகள், ரணங்கள் மாறி வாய்ப்புண் உதடு ரணங்கள் தானாகவே ஆறிவிடும். மேலும் அதிக காரம், உரைப்பு, மாமிச உணவுகள் இவைகளை நீக்கி, பால், தயிர், நெய், வெண்ணெய், பழ வகைகள் ஆகாரமாக உட்கொள்ளுவது ரணத்தை ஆற்றவைக்கும் சிறந்த உபாயமாகும். மேலும் நம் நாட்டு முறைபடி தலைக்கு எண்ணெய் ஸ்னானம் செய்து வெய்யிலில் அலைந்து திரியாமல் ஓய்வு எடுப்பதில் இரைப்பை ரணம் ஆறுவதற்கு வழியாகும். எளிதில் செரிப்புண்டாகும் மென்மையான ஆகார வகைகளை உண்டு வருவதும், வாய் ரணம், உதடுகள் ரணம் ஆற நல்வ வழிகளாகும்.

நாக்கு ரணம்.

நாக்கு ரணம் ஆவது இரண்டு விதம் ஆகும். (1) மேகநீர் இல்லாதவர்கட்கும் நாக்கின் (ரணம்) வெடித்து பாளம் பாளமாகி ரணம் உண்டாகும் இதனை இனம் பிரித்து காணுவது மருத்துவர்களின் நீண்ட அனுபவம் ஒன்றுதான் பயன்படும்.

இஃதன்றி நாக்கு ரணமாகாமல் வெளுத்து மாவு படிந்து காணுவது மலச்சிக்கல் உடையவர் என்பதை கூற முடியும்.

நாவின் மேல் வேர்குரு போன்று சிறு சிறு புள்ளிகளாகக் காணுபவர்களின் உடம்பில் குடல் புண் இருப்பதை உணரலாம்.

சிலர் நாவின் நடுவே பச்சைரணம் போல் சிவப்பாக இருக்கும் இது கல்லீரல், மண்ணீரல் கெடுதிக்கு அறிகுறியாகும்.

சிலர் நாவில் நீட்டிக் காண்பிக்க நாக்கு நல்ல சிவப்பாகி நுனி நாக்கு அமைதியாக இராமல் நடுங்கிக் கொண்டே இருக்கும். இத் தகைய தன்மையுடையவர்கள் இதயம் துடிப்பு சீராக இருக்காது. இதய நோய் உடையவ்ராவர். சிலர் நாக்கை நீட்டினுல் வாய்க்குப் பெரிதாகி சுற்றிலும் பற்களின் குறிகள் பட்டு வளையமாகக் காணும் இத்தகைய நாவு உடையவர்களின் இதயம், நுரையீரல், சிறுநீரகம் யாவும் பழுதடைந்து போய் இருக்கும்.

பொதுவாக நாக்கின் குறி குணத்தைக் கொண்டே இத்தன்மை யான வியாதி உள்ளது என்பதை நீண்ட அனுபவத்தால் ஒரு மருத்துவன் உணர முடியும் என்பதை, ஒரு நோயாளியின் நாக்கு மண்டலம் இன்றியமையாத கருவியாக அமைகிறது.

சித்த மருத்துவத்தில் நைநாடி பரிட்சைக்கு அடுத்தது நாக்கு பரிட்சையே இன்றியமையாததாக உள்ளது. (தொடரும்)

மூலிகை ரட்சை

வாழ்க்கையில் ஏற்படும் பலவிதமான வேதனை, தீராப் பிணிகள், எதிரிகளின் தொல்லை, நவக்கிரகபீடைகளால்வறுமை, காரிய தாமதம், அமைதியின்மை, சந்ததி தடை, திருமணங்கள் தடை, வாழ்க்கையில் முன்னேற்றம் காண முடியாதபடி எதிரிகள் செய்யும் மாந்திரீகம், பில்லி, ஏவல், சூன்யம் போன்றவைகளால் தொல்லை, இத்தியாதி போன்ற தீய சக்திகளை ஒழித்துவிடுவது ‘மூலிகை ரட்சை’ ஒன்றே!

இவ்வகையில் பல்லாண்டுகளாக அரும்பாடு பட்டு ஆராய்ச்சி செய்து மூலிகைகளின் மூலங்களை திருமுருகன் உபாசனையால் சாபநிவர்த்தி செய்து, பிரத்தியேக பூசையில் வைத்து, தேவையுள்ள அன்பர்களுக்கு அனுப்பப்படுகிறது. இதன் பேரில் அன்பும், நம்பிக்கையும் உள்ளவர்கள் எழுதினுல் இதன் முழு விவரமும் தெரிவிக்கப்படும்.

அடுத்த மாத இதழ்

150-வது மூலிகை சிறப்பு மலராக

வெளிவருகின்றது.

1961-ல் ஆசிரியர் அவர்களால், 'தினமணி' யின் வாயிலாக வெளியிடப்பட்டு வந்த நம் நாட்டு மூலிகைகள் ஆய்வுத் தொடர் கட்டுரையில் இது வரை 149 மூலிகைகள் மக்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டு விட்டன. அடுத்த இதழான ஆடி மாத இதழில் 150-வது மூலிகை சிறப்பான இடம் பெறுகிறது. அது என்ன மூலிகை தெரியுமா?

தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் நிச்சயமாக இடம் பெற்றுள்ள ஒரு மூலிகை! தான் பெற்ற குழந்தையை போற்றுவதில் தாய்க்கு எவ்வளவு சிறப்புள்ளதோ, அவ்வளவு சிறப்பு இந்த மூலிகைக்கு உண்டு. பெயர் என்ன தெரியுமா?

"பிள்ளை வளர்த்தி"

ஆசிரியர் இந்த மூலிகையைப் பற்றி எழுத எண்ணம் கொண்டு ஆறு ஆண்டுகள் ஆய்வு செய்து, இப்போது தான் 150-வது மூலிகையாக, சிறப்பான இடம் பெறுகிறது.

இதனையொட்டி வரவிருக்கும் 'ஆடி மாத சிறப்பு மலர்' 100 பக்கங்கட்கு மேல் கொண்டுள்ளது. அத்துடன், தமிழ் நாட்டின் மருத்துவமான சித்த மருத்துவத்தினையும், செர்மானிய நாட்டு மருத்துவமான ஓமியோபதி மருத்துவத்தினையும், ஒற்றுமை — வேற்றுமைகளை, தனது ஆய்வுக்கண் கொண்டு 'ஒப்பீட்டு மருத்துவம்' என்ற புதிய தொடர் கட்டுரை ஆசிரியரால் எழுதப்பட இருக்கின்றது. இவற்றிற் கெல்லாம் சிகரமாக,

"சக்தி தரும் சஞ்சீவி மூலிகைகள்"

என்ற 'இலவச வெளியீடு' ஒன்றும் வாசகர்கட்கு இலவசமாகக் கிடைக்க இருக்கின்றது. இலவச வெளியீட்டுடன், 100 பக்கங்களுடன் மலர இருக்கும்,

மூலிகை மணி ஆடி மாத மலர் விலை ரூ. 1–00

ரூ 6—00 சந்தா சேர்ந்து விட்டால் வழக்கம் போல் சந்தாரருக்கு 0—50 காசு மிச்சமாகும்.

வாசகர்கள் உடனடியாகச் சந்தா சேர்ந்தால் மலரும்— இலவச வெளியீடும் ஏமாற்றமின்றி பெறலாம்.

முகவரி : **ஆ. இரா. கண்ணப்பர்,**

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1. (வ. ஆ.)

மூலிகை மன்னர் வரலாறு!

க. வேங்கடேசன், B. Sc., — சித்திரை மாதத் தொடர்ச்சி

இழந்து போன ஒரு பொருளை, மீண்டும் எதிர்பாராத நேரத்தில் பெறும் போது, நாம் அடைகின்ற மகிழ்ச்சியே ஒரு வகையான தாகும். அந்தப் பொருளை அடைவதற்குக் காரணமாகின்றவர்களை வாழ்வின் 'கலங்கரை விளக்காக' நாம் கருதுகின்றோம்.

இளமையிலேயே வறுமைச் சூறுவளியில் காற்றுடியென அலைக்கழிக்கப்பட்ட, கண்ணப்பனின் கல்வி அவரைப் பொறுத்த வரையில் 'இழந்த சொர்க்கமாகவே' இருந்தது. படிப்பதற்கு ஆர்வமிருந்தும் வயது இருந்தும், வசதியும் வாய்ப்பும் இல்லாமற் போய்விட்டதே! என்று அடிக்கடி நினைந்து வருத்தப்படுவார், மூன்று குழந்தைகளைப் பெற்ற பிறகுங்கூட. மூன்றாவது குழந்தையாகப் பிறந்தவன் தான் பாபு. அழகில் குறைவின்றி பிறந்த இவன், அடிக்கடி நோயுடன் போராடினான். ஒருபக்கம் அறிவு வேட்கை, இன்னொரு பக்கம் மூன்று குழந்தைகளையும், வளர்த்த அன்னையையும், கட்டிய மனைவியையும் காப்பாற்ற வேண்டிய கடமை. அட்டைப் பெட்டித் தொழிலில், அரை வயிறு சோறு தவறாமல் கிடைத்தது. ஆனால் அறிவுத் தாகத்தினைப் போக்கும் அருமருந்து மட்டும் பலநாளும் கிடைக்காமற் போயிற்று கண்ணப்பனுக்கு.

இந்நிலையில், வேலூரில் புகழ் பெற்று விளங்கிய டாக்டர் J. C. டேவிட் என்னும் ஓமியோபதி டாக்டர், ஒரு சங்கம் நடத்தினார். அதில் தற்செயலாகக் கலந்துக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. டாக்டர் J. C. டேவிட் உருவத்தால் மட்டுமின்றி உள்ளத்தாலும் உயர்ந்தவர் என்பதை, அவருடன் பழகிய சில நாட்களில் தெரிந்து கொண்டார் கண்ணப்பன். அந்த நாட்களிலேயே ஓமியோபதி மருத்துவ முறையில் நிறைந்த அனுபவ அறிவும், ஆராய்ச்சி உள்ளமும் கொண்டவர் டாக்டர். டேவிட் அவர்கள். ஆனால் வயது முதிர்ந்த காரணத்தால் சரிவர தன்னுடைய உழைப்பின் பலனை வெளிப்படுத்த முடியாமல் தவித்தார். ஓமியோபதியின் களஞ்சியமாகவே விளங்கிய அவர், நல்லதொரு மாணாக்கனை எதிர்பார்த்திருந் திருப்பார் போலும்.

ஒரு நாள், அவர் வீட்டின் வாயிலில், மெல்லியதான ஒருவர் வந்து வெகு அடக்கமாக நின்று கொண்டிருந்தார். அருகில் சென்று

டாக்டர். டேவிட் பார்த்து விட்டு, "உன்பேரு கண்ணப்பன் இல்லே, ஓமியோபதி அசோசியேஷன் கூட்டத்துக்கு அடிக்கடி வருவியே! எனக்கு நல்லா ஞாபகம் இருக்கே" என்றார்.

"ஆமாம் சார்! உங்கள் பேச்சினை நான் அடிக்கடிக் கேட்டதால் தான் ஒரு உதவிக்காக இங்கு வந்துள்ளேன்" என்றார் கண்ணப்பன்.

"நான் என்னைப்பா செய்ய வேணும்" என்றார் டாக்டர். டேவிட்.

டாக்டர். J. C. டேவிட்

எனக்கு உங்களிடத்தில் ஓமியோபதி படிப்பு படித்து டாக்டர் ஆக வேணும் என்பது எனது ஆசை. நான் இந்த ஊரிலேயே புகழ் வாய்ந்த கலாஸ்பாளைய 'மருத்துவ குடும்பத்தை' சார்ந்தவன். பரம்பரையாக வந்த நாட்டு மருத்துவத்தில் கொஞ்சம் அறிவு உண்டு. எட்டாவது வரை தான் படித்துள்ளேன். இளமையிலேயே பெற்றோரை இழந்து, சுய முயற்சியில் தொழில் செய்து மூன்று குழந்தைகளைக் காப்பாற்றிக் கொண்டு ஏதோ வாழ்ந்து வருகிறேன். இந்த நிலையில் 'டாக்டராக வேண்டும்' என்பது தான் எனது நெடு நாளைய ஆசை. அதற்கு உங்களைப் போன்றவர்களின் உதவி தான் தேவை. நீங்கள் எனக்கு குருவாக இருந்து ஓமியோபதி மருத்துவத்தைக் கற்றுத் தர வேண்டும்" என்று தன் மனம் திறந்து வேண்டினார் கண்ணப்பன்.

இத்தகைய ஒரு மாணவனைத் தான் எதிர்பார்த்திருந்த டாக்டர் டேவிட் அவர்கள், உடனே பாடம் சொல்ல ஒப்புக்கொண்டார். அன்றிலிருந்து இருவரும், இராமகிருஷ்ண பரமஹம்சரும் — விவேகானந்தரும் போல் மனதால் பிணைந்தனர்.

திரு. டேவிட் அவர்கள் 60-க்கு மேல் வயதாகியும், அறிவில் இளைஞராகவே இருந்தார் என்பதை அவர் பாடம் சொல்லிய முறையிலிருந்து நன்கு தெரிந்து கொண்டார் கண்ணப்பன். வெம்மையில் தீய்ந்து போன நிலத்தில் எங்ஙனம் நீர்த்துளி பட்டால் நிலம் எப்படி உடனே கிரகித்துக் கொள்கின்றதோ, அங்ஙனம் அறிவு வெம்மையால் காய்ந்து போயிருந்த கண்ணப்பனின் மூளைக்கு, டாக்டர் டேவிட் அவர்களின் கல்வி என்னும் மழை, பாய்ந்து பாய்ந்து அறிவு வறட்சியைப் போக்கியது.

ஆங்கில அறிவுடன் ஓமியோபதி படிப்பு நன்கு பாடமாகியது. ஏறக்குறைய மூன்றுண்டுகள் கடுமையாக படித்தார். காலையில் ஆறு மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை வீட்டிலேயே அட்டை பெட்டி தொழில் செய்து குடும்பத்தைக் காப்பாற்றுவார். மாலை 6-மணிக்குப் பிறகு, டாக்டர் டேவிட் அவர்களின் வீட்டிற்குச்சென்று இரவு 9-மணி வரை ஓமியோபதி பாடம் கேட்பார். இங்ஙனம் மூன்றுண்டுகள் கடுமையாக உழைத்ததின் பலன், சாதாரண கண்ணப்பன், டாக்டர். கண்ணப்பனுக மாறினுர். ஆமாம்! 'Indian Institute of Homeopathy' என்று அந் நாளில் புகழ் பெற்றிருந்த கல்வி நிறுவனம் நடத்திய தேர்வுகளில் வெற்றி பெற்று, டாக்டர் பட்டம் பெற்றுர்.

டாக்டர் டேவிட் அவர்கள் இங்ஙனம் கண்ணப்பனின் அறிவுப் பசிக்கு உணவிட்டதன் மூலம், அவரின் அறிவுப் பசி ஓரளவிற்கு அடங்கியது. படிப்படியாக அவரிடம் பாடம் கேட்டு விட்டு, பிறகு அத்துறையில் தனியாகவே ஆய்வுச் செய்ய ஆரம்பித்தார். அதன் பலனுக, டாக்டர் டேவிட் அவர்களே போற்றும் அளவுக்கு சில ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் அந் நாளிலேயே எழுதத் துவங்கினுர். 'Homeopathy' என்ற பெயரில் வெளிவந்துக் கொண்டிருந்த ஒரு மாத இதழில், தனது ஆராய்ச்சிகளைத் தொகுத்து,

"Therapetic notes on various English authers"

என்ற தலைப்பில் தனது ஆய்வுரைகளை எழுதி வந்தார். இதனை அப்போது பெரும் புகழ் வாய்ந்த ஓமியோபதி டாக்டர். மூர்த்தி அவர்கள் பாராட்டிப் புகழ்ந்தார். டாக்டர் டேவிட் அதனைக் கேட்டு தான் ஊன்றிய அறிவு வித்து, நல்ல பண்பட்ட நிலத்தில் தான்! பிற்காலத்தில் நாட்டிற்கு நல்ல பலனைத் தரும் என்று மகிழ்ந்தார்.

இங்ஙனம் தொடர்ந்த ஓமியோபதி ஆய்வில் ஒரு திருப்பு மையமாக, தமிழ் நாட்டின் தொன்றுதொட்ட பழக்கமான அணிகலன்களை அணிவதன நோக்கத்தினையும், அதனுல் வருகின்ற நன்மைகளையும் அறிந்து, அதனை ஓமியோபதி மருத்துவக் கொள்கையுடன் ஒப்பிட்டு, 'இணை விதியும்—அணிகலனும்' என்ற புதிய தலைப்பில் ஒரு பெரிய

ஆய்வுக் கட்டுரையை வழங்கினுர். இதனைப் படித்த அந் நாளைய ஜட்ஜ்வெங்கட்ராமையா அவர்கள் டாக்டர் கண்ணப்பனை அழைத்து "இந்த கட்டுரையை எழுதிய உங்களை எப்படி பாராட்டுவது என்று தெரியவில்லை" என்ருர். அன்று அந்த ஜட்ஜ் வழங்கிய தீர்ப்பை இன்று ஆயிரமாயிரம் தமிழ் நெஞ்சங்கள் கூறிக்கொண்டிருக்கின்றன.

இங்ஙனம் 'குருவுக்கு மிஞ்சிய சீடனுக' விளங்கிய டாக்டர் கண்ணப்பனை, டாக்டர் டேவிட் தனது சொந்த மகனைப் போலவே பாராட்ட ஆரம்பித்தார். அறிவுக்கு எங்ஙனம் கல்வி புகட்டி வளர்த்தாரோ, அங்ஙனம் அவ்வப்போது கண்ணப்பனின் குடும்பம் வறுமையில் வாடிய போது, செலவிற்குப் பெருர்பாலும் தந்து உதவி போற்றினுர். குருவாகவும், தந்தையாகவும் நின்று வழிகாட்டி, அறிவும்-பொருளும் தந்து தனது வாழ்வை உயத்திய டாக்டர். டேவிட் அவர்கள், இன்று அவரின் வளர்ச்சியைக் காண இல்லை. ஆனுலும், உயிருடன் இருந்தபோது அவர் கூறிய வார்த்தைகள், "கண்ணன்! வருங்காலத்தில் நீ நிச்சயமாக நல்ல ஒரு டாக்டராக வருவாய். பேரும் புகழும் பெற்று நல்ல நிலைமையில் உன் குடும்பம் வாழும். கர்த்தர் உனக்கு நல்வழி காட்டுவார்" என்று வாழ்த்தினுர். அந்த வாழ்த்து இன்று நடைமுறையில் பலித்துள்ளது.

(தொடரும்)

செய்தி:

கடந்த 31—5—72 அன்று சிக்கல் ஸ்ரீ சிங்காரவேலர் ஆலயத்தின் நிர்வாகத்தில், ஒரு இலவச சித்த மருத்துவ மனை திறப்பு விழா நடந்தது. ஷ விழாவில் அமைச்சர்கள்: அன்பழகன், மன்னை நாராயணசாமி, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ., டாக்டர் பு. மு வேணுகோபால், ஆசியர் கண்ணப்பர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினுர்கள்.

சித்த மருத்துவ மனை சீரும் சிறப்புமாக நடக்க நமது வாழ்த்துக்கள்!

விழாவினை ஏற்பாடு செய்து, வேண்டிய வசதிகளை செய்து கொடுத்த நிர்வாக அலுவலர், திரு. டி. ரி. வெங்கடாசலம். பி. ஏ., அவர்கட்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

— ஆசிரியர்.

அனுபவம் உணர்த்தும் உண்மை!

P. V. ராமச்சந்திரன், 92, காமாட்சியம்மன் கோவில் வீதி,
பாண்டிச்சேரி-1.

அன்புள்ள ஐயா,

தாங்கள் 30—1—72 தினமணி சுடரில் "*நீர் ஆரை என்ற ஆரு கீரை*" என்பது பற்றி எழுதியிருந்தீர்கள். அதில் 'டயாபடீஸ்' என்னும் வியாதிக்கு ஷ கீரையை 40 நாள், 80 நாள், 120 நாள் உணவு மூலம் சாப்பிட்டு வருவார்களானுல் அடியோடு 'டயாபடீஸ்' ஒழிந்து போகும் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். எனக்கு டயாபடீஸ் ஆரம்பித்து சுமார் ஒன்று அல்லது ஒன்றரை வருடமாகிறது. முதலில் சிறுநீரில் சர்க்கரை 'Plus + + +' இருந்தது. டாக்டரிடம் காட்டிய தற்கு சர்க்கரை, அரிசி உணவு இல்லாமல் பதிஊைந்து தினத்திற்கு சாப்பிட்டு வரும்படி கூறினுர். அவ்வாறு சாப்பிட்டதற்கு 'Plus + +' ஆக குறைந்திருந்தது. அப்பொழுது தாங்கள் மேற்குறித்த விதத்தில் நாள் தோறும் உணவுடன் மேற்படி கீரையை சேர்த்துக் கொண்டு வந்து, ஆரும் நாள் சிறுநீர் பிடித்து டாக்டரிடம் பரிசோதஊை செய்தேன். பரிசோதித்ததில் மிகக் குறைந்து சிறுநீர் பச்சைக் கலரில் இருந்தது. நீங்கள் எழுதியிருந்ததற்கும் அதன் பிரகாரம் நான் கீரை சாப்பிட்டதற்கும் வியாதியில் நல்ல தெளிவு ஏற்பட்டிருக்கிறதென்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு அன்பர்! பெங்களுர்-21.

தங்கள் நூஊலப் படித்து அதன்படி செய்து—என் குறைகள் சிலவற்றைப் போக்கிக் கொண்டு வருகிறேன்.

(1) என் கண்களில் நீர் வடிந்துக் கொண்டிருந்தது. பார்வையும் சற்று குறைவாக இருந்தது. அதற்கு பொன்னுங்கண்ணிக் கீரையை 40 நாள் உண்டேன். இப்பொழுது நீர் வடிவதில்ஊல. பார்வையும் தெளிவடைந்திருக்கிறது. மலச்சிக்கலும் நீங்கியது.

(2) பசியின்மையை 'ஐந்தறைப் பெட்டி இளகலில்' தீர்த்துக் கொண்டேன்.

(3) பல் வலியை கடுக்காய் - சுக்கு தீர்க்கிறது.

(4) பொன்னுங்கண்ணி, அரைக் கீரை, வாதநாராயணன் கீரை, தூதுவஊள கீரை வகைகஊள அதிகமாக உணவில் சேர்த்து வருகிறேன். இதனுல் உடல் சோர்வு இல்ஊல.

வளர்க தங்கள் மருத்துவத் தொண்டு!

இதய ஒலி!

B. R. கிருஷ்ணமூர்த்தி, சேலம்-1.
7—6—72

பெருமதிப்பிற்குரிய மூலிகை மாமன்னர் அவர்களுக்கு,

சித்த மருத்துவம் முழு வளர்ச்சியடைந்து, அதன் உண்மையான மதிப்பை இந்த உலகம் உணரும் நாள் மிக அருகிலேயுள்ளது என்பது, 'மூலிகை மணி' யில் தாங்கள் எழுதும் ஒவ்வொரு எழுத்தும் பறைசாற்றுகிறது.

அன்பன் : B. R. கிருஷ்ணமூர்த்தி

இராம விசுவநாதன், தூசி P. O. செய்யார் Tk.
8—6—72

மதிப்பிற்குரிய மருத்துவ ஐயா, வணக்கம்.

தங்கள் 'மூலிகை மணி' வைகாசி இதழில் வெளியாகியுள்ள 'சரக்கு சுத்தி' என்ற கட்டுரை பெரும் பயன் தரவல்லது. மருந்துகளை எவ்வாறு சுத்தி செய்வது என்பது பற்றி இதுவரை எங்கள் ஊர் வாசகர்கள் அறிந்துக் கொள்ளாமலே இருந்தனர். இக் கட்டுரை வெளியிட்டதன் மூலம் சில சுத்தி முறைகளை நாங்கள் தெரிந்துக் கொண்டோம். இக் கட்டுரை மேலும் தொடரட்டும். இது போன்ற முறைகளை எம் போன்ற வாசகர்கள் தெரிந்து பயன் பெறட்டும்.

வாழ்க உங்கள் பணி! அன்புள்ள : இராம விசுவநாதன்

ஆ. சண்முகம், திம்மாச்சிபுரம் P. O.
28—5—72

பேரன்புடைய ஆசிரியருக்கு,

தாங்கள் அனுப்பிய 'மூலிகை ரட்சையை' அணிந்ததிலிருந்து என் தாயாருக்கு நோயின் உபாதைகளும், மனக்கவலையும், வயிற்று வலியும் குறைந்திருக்கிறது. தங்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொண்டு கடமைப்பட்டிருக்கிறேம்.

இப்படிக்கு, ஆ. சண்முகம்

S. பாலசுப்ரமணியன், குண்டக்கல். (A. P.)
17—6—72

ஐயா, முன்பு அனுப்பிய 'நேத்திரப் பூண்டு தைலம்' எனது நண்பர் மகனுக்கு உபயோகித்ததனுல் இவ்வளவு சீக்கிரத்திலேயே பாதி குணம் கண்டு அவர் மிகுந்த நன்றி தெரிவித்து, சந்தாதாரர் ஆகவேண்டும் என்றார். முருகன் அருளால் தங்கள் தொண்டும், தாங்களும் நீடுழி வாழ பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம் : முத்துக் காளத்தி

மூலிகை மணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவரும் ஆசிரியரும் வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், 33-1, தென்னமரம் தெரு வேலூர்-1 (வ. ஆ.)

உ

மூலிகை மணி

மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர் அவர்கள்

திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி
ஆகிய கிழமைகளில்
23, கிளப் ரோடு - கிழக்கு, ஷெனாய் நகர்,

சென்னை -30.

சனி, ஞாயிறு இருநாட்களில் மட்டும்
4, சாதுகாரமடம் தெரு-2, சலவன்பேட்டை,

வேலூர்-1. (வ. ஆ.)

ஆகிய இரு இடங்களில் நேரில் சந்தித்து
மருத்துவ ஆலோசனையும், மருந்தும் பெறலாம்.

ஆலோசனை கட்டணம் உண்டு.

நோயாளிகள் எமது ஆலோசனையும், மருத்துவச் சிகிச்சையும் பெற விரும்பினால், மேல்கண்ட விவரப்படி சென்னை, அல்லது வேலூருக்கு குறித்த நாட்களில் வந்து ஆலோசனையும், கைநாடி, உடல்நிலை கண்டு முறைப்படி சிகிச்சை பெறலாம்.

நேரில் வர வசதியற்றவர்கள் எங்கள் நூல்களில் எழுதி இருக்கும் சிகிச்சை முறைகளைப் படித்து, இலகு முறையில் செய்து குணம் காணலாம். கடித மூலமாக சிகிச்சையோ, ஆலோசனையோ பெறுவது பயன் தராது. சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்போர் ரிப்ளை கார்டு அல்லது தபால் தலை வைத்த கவர் அனுப்பவேண்டும்.

மூலிகை மணி வெளியீடுகள், மருந்துகள் - சென்னை, வேலூர்
ஆகிய இரு இடங்களிலும் கிடைக்கும்.

எமது வெளியீடுகள்:

நம் நாட்டு மூலிகைகள்	1-ம் பாகம் ரூ.	3	00
நம் நாட்டு மூலிகைகள்	2-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	3-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	4-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	5-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	6-ம் பாகம்	3	00
நோயும் மருந்தும்	1-2 பாகம்	3	00
நோயும் மருந்தும்	3-4 பாகம்	2	00
விஷ ஜந்துக்களும் மூலிகைகளும்		3	00
புகழ் பெற்ற மூலிகைகள்		0	60
மனித உறுப்புக்களில் மூலிகைகளின் குணாதிசயங்கள்		0	60
பயன் தரும் பத்துக் கீரைகள்		0	60

ஒரு புத்தகத்திற்கு தபால் சிலவு 0-25 சேர்த்து அனுப்பவும்.

மொத்த புத்தகமும் தபாலில் பெற

புத்தக விலையுடன்

ரூ. 2-75 சேர்த்து கீழ்கண்ட முகவரிக்கு

மணியார்டர் அனுப்பி பெறலாம்.

முகவரி: ஆ. இரா. கண்ணப்பர்,

மூலிகை மணி அலுவலகம்,

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

Printed at Mooligai Mani (P) Press, Vellore N. A.
Printer, Editor & Publisher Dr. A. R. Kannappar, R. M. P.
59, Masilamani Muduli Street, Vellore, N. A.